# THE TAMING OF THE SHREW.

## சண்டைக்காரி சாதுவாக்கப்பட்டது.

BY

**T. S. D' Sami.**


PUBLISHED BY

***T. KRISHNASAMI AIYAR,***

**Hindu Educational Trading Co.,**

**KUMBAKONAM.**

**191[illegible].**



**All rights registered.]**



**[PRICE 4-ANNAS.**

# THE TAMING OF THE SHREW.

## சண்டைக்காரி

## சாதுவாக்கப்பட்டது.

BY

**T. S. D' Sami.**

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

PUBLISHED BY

*T. KRISHNASAMI AIYAR,*

Hindu Educational Trading Co.,

KUMBAKONAM.

1913

All rights registered.] [PRICE 4-ANNAS.

BY:
V. PR. P. M.
CHETTIAR
PAGANERI

Title Page and Preface
PRINTED AT THE SRI KRISHNA VILAS PRESS,
KUMBAKONAM.

# பீடிகை.

புருஷன் சொற்களுக்கமைந்து நடத்தல் ஸ்திரீ இலக்ஷணங்களில் ஒன்று என்று நிரூபிக்க,

"அடிசிற் கினியாளே! அன்புடையாளே!
படிசொற் றவறாத பாவாய்!" என்று

இறந்த தன் மனைவியின் உத்தம குணங்களை நினைந்து மனம் கசிந்துருகிய திருவள்ளுவ நாயனாரின் புலம்பலைத் தவிர வேறெதை எடுத்துரைப்பேன். அவருடைய பத்தினியாகிய வாசுகியின் உத்தம குணங்களில் முதலாவதாக "படிசொற் றவறாத பாவாய்" என்றார். இப்படியாக அவர் விம்சஷித்துக்கூறிய இத்தர்மத்தை விளக்கிக் காட்ட அவர் மனைவியின் சரித்திரத்திலேயே கிணற்றில் ஜலம் தூக்கிய சரிதமும். அவள் தன் புருஷனுக்கு அன்னம் படைக்குங்கால் தன் புருஷன் கட்டளையால் ஒரு சிறு பாத்திரத்தில் ஜலமும் ஓர் ஊசியும் காரணம் கேளாமலே தினம் கொண்டு வந்து வைத்த சரித்திரமும், இன்னும் அநேக கதைகளிருப்பினும் இது விஷயத்தில் ஐரோப்பியருடைய அபிப்பிராயம் இன்னதென்று உணர்த்த ஆங்கில மகா கவி ஷேக்ஸ்பியர் எழுதிய, "தி டேமிங் ஆப் தி ஷ்ரு," **(The Taming of the Shrew)** என்னும் நாடகத்தை கதா ரூபமாக எழுதினேன்.

பதிவிரதா தர்மத்தை விளக்க "இஸபெல்லாவும்." பிறகு தன் புருஷனிடத்தில் என்ன குறைவு கண்டாலும் அவன் பேரில் பிரமாணிக்கமாயிருக்க வேண்டுமென்று உணர்த்த "வெரோனா நகரத்து இரு குலமக்களும்" எழுதின பிறகு, ஸ்திரீ தர்மங்களை பூர்த்தி செய்ய புருஷன் சொற்றவறாமையும் அவசியமென்றுணர்த்த இவை எழுதப்பட்டது.

**KUMBAKONAM,**
**19th February 1913.**

**T. S. D'SAMI.**

# THE
# TAMING OF THE SHREW.

## சண்டைக்காரி சாதுவாக்கப்பட்டது.

### (ஒரு பரிகாசக் கதை.)

இத்தாலியாவின் வடகிழக்கில் பதுவை(Padua) மாநகரமென்றொரு பட்டணமுண்டு. அந்நகரில் திரவியவந்தனான ஒரு வணிகனிருந்தான். அவன்பெயர் பப்திஸ்தா (Baptista) அவனுக்கு கத்தரினாள், (Catherine) பியான்கா (Bianca) வென இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். இவர்களுள் இளையவளான பியான்கா வெகு மதுரகுணசீலி. தயை, சாந்தம், பொறுமை முதலிய சகல நற்குணங்களையும் தனக்கு ஆபரணமாகப் பூண்டவள். ஆனால் மூத்தவளான கத்தரினாள் எப்படி என்பீர்களோ? அதை மட்டும் கேட்கவேண்டாம். இளையவளின் நற்குணங்களைக் கேள்விப்பட்டு அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள அநேக வாலிபர்கள் எனக்கு உனக்கென்று ஓடிவந்தார்கள். இவர்களுக்கெல்லாம் இவள் தகப்பனாகிய பப்திஸ்தா என் மூத்தமகள் விலையாகாமலிருக்க, இளையவளுக்கு மணமுடிப்பதில்லை யென்று சொல்லிவிட்டான். ஏன்விற்றுத் துலைக்கிறதுதானே என்றாலோ யார் வாங்குகிறது? அவள் பண்டசாலையில் விலையாகாத சரக்குகளிலொன்

ற்றிப் யாரும் கேட்பாரற்றுக் கிடந்தாள். எனப்படிக் கிடந்தாளென்பீர்களோ? சொல்லாமல் எப்படி தப்பித்துக்கொள்வது, வேறு வழியில்லை. சொல்லித்தான் ஆகவேணும். எனக்கோ வெட்கமாயிருக்கிறது; இரகசியமாய்ச் சொல்லுகிறேன்.

அவள் ஓர் பஜாரி, பெருஞ் சண்டைக்காரி, யாருக்கும் அடங்காக் குணமுடையவள். தெருவில் போகிறவனையும் இறக்கடிகூடையை என்று வலியச் சண்டைக்கிழுப்பாள். இப்பேர்ப்பட்டவளை எவன் கல்யாணஞ் செய்துகொள்வான்? வந்தவர்களெல்லாம் இவள் வாயைப் பார்த்துவிட்டு எனக்கு வேண்டாம் உனக்கு வேண்டாமென்று ஓட்டம் பிடித்தார்கள். ஆனால் அவள் தகப்பன் ஒரே பிடிவாதமாய் மூத்தவளிருக்க இளையவளைக் கல்யாணஞ் செய்து கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டபடியால், இளையவளின் காதலர்களி லொருவனாகிய ஓர்டேன்சியோ (Hortensio) எப்படியாவது மூத்தவளுக்கு ஓர் புருஷன் சம்பாதிக்க வேண்டுமென்று தீர்மானித்தான். கத்தரினாளின் தகப்பன் திரண்ட ஸ்திரீதனம் கொடுப்பதாயும் தெரிவித்திருந்தார். அவள் ஸ்திரீதனத்திற்கு ஆசைப்பட்டாவது அவளைக் கட்டிக்கொள்ள எவனாவது வரமாட்டானா என்றெண்ணியிருந்தான். எவனைக் கேட்டாலும், போ, போ, யார் தினம் அவளிடம் துடைப்பக்கட்டை அடிபடுகிறது. அவள் ஸ்திரீதனம் எனக்கு வேண்டாமென்பான். மற்றொருவன் இவளைக் கட்டிக் கொள்வதைவிட ஓர் கழுதையைக் கட்டிக்கொண்டு

உதைபடலாமென்பான். ஓர்டென்சியோ எப்படி யாவது மூத்தவளுக்குப் புருஷன் தேடினல்தான் இளையவள் தனக்குச் சித்திப்பாளென்று வெகு ஊக்கத்துடன் பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கும்போது அவன் பழைய சிநேகிதனுகிய பெட்ருஷியோ (Petruchio) அவன் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் ஓர்டென்சியோ:—"என்னருமை நேசா, ஏது இவ்வளவு தூரம்? வெரோனுவிலிருந்து பதுவைக்கு என்ன காற்றடித்தது" என்றான்.

பெட்ருஷியோ :— பிரமசாரிகளை ஊர் ஊராய் அடித்துக்கொண்டுபோகும் காற்றுதான் என்னையும் இவ்விடம் அடித்துக்கொண்டுவந்தது. சுருக்கமாய் சொல்லவேண்டுமானல் என் தகப்பன் அந்தோனியோ இறந்தார். நான் திரவியந்தேடி ஓர் நற்பாரியை மணந்து விர்த்தியடைய வேண்டுமென்று புறப்பட்டேன் என்றான்.

ஓர்டென்சியோவின் சினேகிதனுகிய பெட்ருஷியோ ஓர் நல்ல விவேகி; சாதுரியமாய்ப் பேசவல்லோன், சமர்த்தன், சரசமாய்ப் பேசியே சமத்காரமாய் தன் காரியங்களை முடித்துக்கொள்ளத் திறமையுடைத்தானவன். இவன் வந்த காரியம் அவன் சினேகிதனுகிய ஓர்டென்சியோ எண்ணியிருந்த எண்ணத்துக்கு ஒத்ததாக இருந்தது.

ஓர்டென்சியா :—"அப்படியானல், பெட்ருஷியோ உனக்கு சண்டைக்காரியாகிய பெண் வேண்டுமோ? அவள் மிகுந்த ஆஸ்திக்காரி; நீ தேடிவந்த

இரண்டு காரியமும் ஒருமிக்கக் கிடைக்கிறது. ஒரே வேட்டில் இரண்டு பக்ஷி. உடனே திரவியவந்தனாக லாம். ஆனாலும் என் சினேகிதனுக்கல்ல அப்பேர்ப் பட்ட பெண் தேடிவைப்பது. அவளை நீ கல்யாணம் பண்ணிக்கொள்ள நான் சம்மதியேன்." அதற்குப் பெட்ருஷியோ, "சினேகிதா உனக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. பெட்ருஷியோவின் மனை வியென்றழைக்கப் போதுமான திரவியமுள்ளவளா யிருந்தால் போதும். கோடை இடிக்குச் சமான மாய் இரைந்து தன் புருஷனை வைது பிறகு மாடிமே லிருந்து அவன் தலையில் ஜலத்தைக்கொட்டிய நமது ஸாக்ரட்ஸ் ஞானியாரின் பத்தினியாகிய சாந்திப் பையைவிட ஒரு படி மீசுரமாயிருந்தாலும் பரவா யில்லை. என் மனம் தளராது, எனக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. அவளுக்குக் கோபம் சமுத்திர மாய்த்தான் பொங்கட்டுமே. அவள் ஆஸ்திக்காரி யானால் சந்தோஷமாய் மணம் புரிவேன்" என்றான்.

ஓர்டென்சியோ:—இவ்வளவு தூரம் சொன்ன பிறகு, பெட்ருஷியோ, திரவியமுடையவளாயும் ரூப வதியாயும் மேற்குலத்திலுதித்தவளாயும் உள்ள ஒரு சிறுமியை உனக்கு சம்பாதித்துத் தருகிறேன். அவள் சகல இலட்சணங்களும் பொருந்தியவள் தான். ஆனால் ஒரே ஒரு குறைவு உண்டு. அதாவது அவள் சகிக்கமுடியாத சண்டைக்காரி, வாய்ப்பட்டி. எவ் வளவு ஏழையானாலும் சரி எனக்கு ஒரு சுரங்கப் பொன் கொடுத்தாலும் அடே அப்பா! நான்மாத் திரம் அவளுக்குத் தாலி கட்டமாட்டேன்.

பெட்ருஷியோ:—ஓர்டென்சியோ, பணத்தின் மகிமையை நீ யறியமாட்டாய். அவள்யார் மகள் சொல், போதும். அவள் மாரிகாலத்து இடிக்குச் சமானமாய் அதிர்ந்து என்னை வைதாலும் அவளை மணம் புரிவேன்.

ஓர்டென்சியோ:—அப்படியானால் அவள் தகப்பன் பெயர் பப்திஸ்தா மினோலா; அவள் பெயர் கத்தரீன் மினோலா. இப்பதுவைப் பட்டணத்தில் பஜாரித்தனத்தில் வெகு பிரக்கியாதி பெற்றவள்.

பெட்ருஷியோ:—ஓகோ! அவளைத் தெரியா விட்டாலும் அவள் தகப்பனுரை எனக்கு நன்றாய்த் தெரியும். இறந்துபோன என் தகப்பனுரையும் அவர் நன்றாய் அறிவார். ஓர்டென்சியோ நான் அவளைப் பார்க்கிறவரையில் எனக்குத் தூக்கம் வராது. நான் வரும்போதே உனக்குத் தொந்தரவு கொடுக்கிறேன் என்று எண்ணாமல் உடனே அவள் வீட்டுக்கு என்னை அழைத்துப்போ.

ஓர்டென்சியோ:—பெட்ருஷியோ, நானும் உன்னோடு சந்தோஷமாய் வருகிறேன். நான் தேடும் பொருளும் அங்கேயே இருக்கிறது. என் உயிரின் ஆபரணம் பப்திஸ்தாவினிடத்தில் தானிருக்கிறது. அவனுடைய இரண்டாவது மகள் பியான்கா," என்று சொல்லி இருவருமாய்ப் புறப்பட்டுப் போனார்கள்.

இவர்கள்போகும் வழியில் இவர்களுக்கு எதிர்ப் பட்டு ஓர்டென்சியோவின் நோக்கத்தை அறிந்த சிநேகிதர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு பெட்

ருஷியோ அன்னிய ஊரானாகையால் மூத்தவளின் குணமறியாமல் அவளைமணக்கப்போகிறானேயென்று பரிதாபப்பட்டார்கள். இதற்கெல்லாம் பெட்ருஷியோ: "சீ ஓர் அற்ப சத்தத்திற்கா பயப்படுவேன்? நான் வேட்டைக்குப் போனபோது அக்காட்டில் கர்ச்சித்த சிங்கத்தின் பேரொலிக்குப் பயந்தேனா? சண்டையில் அதிரும் பீரங்கியின் சப்தத்திற்கு நடுங்கினேனா? கடலை கொந்தளிக்கச் செய்த சண்டமாருதத்திற்கு அஞ்சினேனா? நெருப்பில் வெடிக்கும் காட்டுச் சுள்ளிக்குச் சமானமான ஓர் பெண்பிள்ளையின் நாவுக்கா அஞ்சப்போகிறேன்? சீ, சீ, பயங்காளிகளா போங்கள்" என்பான். எவ்வளவுதான் கத்தரினாளின் அபூர்வ குணத்தைச் சொல்லி அவனைப் பயமுறுத்தினபோதிலும் ஒன்றுக்கும் தளராமல் பப்திஸ்தாவின் வீடுவந்து சேர்ந்தான். தனிகன் வீட்டுக்கு ஒருவன் போனால் முன் தான் வந்ததை ஒரு சேவகனால் வீட்டின் எஜமானுக்கு அறிக்கைபண்ணும்படி செய்வித்து அவன் உத்தரவின்பேரில் அவனிடங் கொண்டுபோகப்பட்டு உபசாரவார்த்தைகளால் ஒருவருக்கொருவர் உபசாரம் சொன்னபிறகுதான் வந்த காரியத்தை அறிவிப்பது வழக்கம். ஆனால் நம் கதாநாயகராகிய பெட்ருஷியோ திடீரென வீட்டிற்குள் நுழைந்து பப்திஸ்தாவின் எதிரே போய் உபசார வார்த்தைகள் ஒன்றும் சொல்லாமலே "ஐயா, நற்குணமும் அழகும் வாய்ந்த கத்தரினாள் என்னும் பெயருடைய ஓர் பெண் உமக்குண்டோ" என்றான் இவன் மரியாதையற்றதனத்தைக் கண்ட பப்திஸ்தா ஆச்சரியப்பட்டு: "ஆமை

யா, கத்தரிஞளென்று எனக்கோர் மகள் உண்டு" என்று பதில் கூறினர். அவ்விடமிருந்தவர்களும் என்ன, மரியாதையற்ற முரடனுயிருக்கிருன் என்று திகைத்தார்கள்.

பெட்ருஷியோ:—ஐயா, வெரோனுவில் நான் ஓர் மேன்குலத்திலுதித்தவன். உம்முடைய மகளின் அழகையும், அவளுடைய சொல்நயம், சாந்தம், பொறுமை, நாணம், அடக்கமுதலிய அபூர்வகுணங்களையும் அடிக்கடி கேள்விப்பட்டு அவைகளை நேரில் கண்ணுறக் கண்டு போகவேணுமென்னும் ஆசையால் உம்முடைய வீட்டுக்கு அழையா விருந்தாளியாக தைரியமாய் வந்தேன்.

பப்திஸ்தா:—உன் வரவைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனல் என் மகள் கத்தரிஞள்மட்டும் உனக்குப் பிடிக்காதென்று விசனப்படுகிறேன்.

பெட்ருஷியோ:—அவளைவிட்டுப் பிரிய தங்களுக்கு மனமில்லைபோலிருக்கிறது. அல்லது நான் தங்களுக்குப் பிடிக்கவில்லையோ?

பப்திஸ்தா:— அப்படியல்ல வாஸ்தவத்தைச் சொன்னேன், நீர் எந்தவூர், உம்முடைய நாமதேயம் என்ன?

பெட்ருஷியோ:—என் பெயர் பெட்ருஷியோ; இத்தாலி நாடெங்கும் பிரக்கியாதிபெற்ற அன்டோனியோ (Antonio)வின் மகன்.

பப்திஸ்தா:—அவரை எனக்கு நன்றாகத் தெரியும்; அவருக்காக உன்னை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

பெட்ருஷியோ:—ஐயா, நான் அதிகநாள் இவ்விடம் தங்கமுடியாது. எனக்குப் பல ஜோலியுண்டு. நானும் தங்கள் மகளின் நேசத்தைப்பெற இவ்விடம் பிரதி தினமும் வரமுடியாது. என் தகப்பனைத் தாங்கள் நன்றாக அறிவீர். அவர் ஆஸ்திக்கும் பாஸ்திக்கும் ஏக சுதந்தரவாளை என்னையும் அவர் மூலியமாக அறிவீர். என் தகப்பனார் எனக்கு வைத்தஆஸ்திபாஸ்திகளைப் பெருகப்பண்ணினேனே தவிர ஒன்றையும் அழித்துவிடவில்லை. ஆகையால் தங்கள் மகள் எனக்கு மனைவியாகும்படி அவள் நேசத்தைப் பெறுவேனேயாகில் அவளுக்கு என்ன ஸ்திரீதனம் வைப்பீர்?

பப்திஸ்தா:—அதற்கென்ன, எனக்குப் பிறகு என் ஆஸ்தியில் பாதியும், இப்போதே இருபதினாயிரம் பவுனும் கொடுப்பேன்.

பெட்ருஷியோ:—அப்படி யானால் எனக்குப் பிறகு அவள் உயிரோடிருந்தால் அவளுடைய வைதவ்வியத்தில் என் ஆஸ்தி முழுமையும் எழுதிவைப்பேன். ஆகையால் நமக்குள் உடனே ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ளுவோம்.

பப்திஸ்தா:—ஆம் எல்லாம் அவள் உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளுகிறதாயிருந்தாலல்லவோ. அதல்லவோ முக்கியம்.

பெட்ருஷியோ:—அதெல்லாம் ஒரு பொருட்டல்ல. மாமா அவள் எவ்வளவு அகங்காரியோ அவ்வளவு பிடிவாதக்காரன் நான். இரண்டு பெரும் நெருப்பு ஒன்றோடொன்று மோதினால் அதற்கு மத்தியிலுள்ள சுள்ளிகள் பஸ்மீகரமாய்ப் போய்விடுமென்று அறியீரோ? சிறு தீ மெதுவா யடிக்கும் காற்றினால் அதிகப்படும், பெருங்காற்றுக்கு நிற்குமோ? அவ்விதமாகவே, சண்டமாருதம்போன்ற எனக்குமுன் அவள் கோபம் எம்மாத்திரம்? நான் ஒருபச்சைக்குழந்தைபோல் அவளிடம்போய் அவள் காதலை மன்றாடுவேன் என்று எண்ணுகிறீரோ?

கத்தரினாளின் தகப்பனாகிய பப்திஸ்தா தன் வாயாடி மகளைக் கலியாணஞ் செய்துகொள்வதாய் வந்திருக்கும் பெட்ருஷியோவின் குணங்கள் விபரீதமாய்த் தோன்றினாலும் தன் மகள் கத்தரினாளைக் கல்யாணஞ் செய்து கொடுத்துவிட்டால் போதுமென்று எண்ணி பெட்ருஷியோவுக்கு தன் மகளைக் கண்டு அவளின் காதலைப் பெற உத்தரவளித்தான். ஆனாலும் கத்தரினாள் தனக்கு ஏற்ற புருஷனாக இவனை அங்கீகரியாமல் இவனை எங்கே அவமரியாதையாய் நடத்துவாளோ என்று எண்ணி பெட்ருஷியோவையும் எச்சரிக்கும்படியாய் "சில துர்ப்பாக்கியமான சொற்களும் கேட்கத் தயாராயிருக்கவேண்டும்" என்றான்.

இப்படியாக இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போதே பியங்காவை அடிக்கடி சந்திக்கவேணுமென்கிற வாசையால் கத்தரினாள் சங்கீத உபாத்தியாயராக

அமர்ந்த ஒர்டென்சியோ மண்டை உடைந்து இரத்தம் ஒழுக வெகு துக்கத்தோடு உள்ளே ஓடி வந்தான். அவன் பரிதாப நிலைமையைக் கண்ட பப்திஸ்தா "சிநேகிதா, என்ன விசனமாயிருக்கிறீர்? என் மகளுக்கு சங்கீதம் நன்றாய் வருகிறதா?" என்றான். அதற்கு உபாத்தியாயர் ஐயா உமது மகள் கையில் வீணையைவிட துப்பாக்கி நன்றாய்ப் பொருந்துமென்றான்.

பப்திஸ்தா:—என்ன வீணை அவள் மனதைக் கரைக்கவில்லையோ?

ஒர்டென்சியோ:—ஆம் அவள் வீணை என் மண்டையை நன்றாய் தகர்த்துவிட்டது. அவள் விரல்களைச் சரியான தந்தியில் வைக்கவில்லையென்று விரல்கள் வைக்கவேண்டிய இடத்தில் அவள் கையை மடக்கினேன். அவள் கோபங்கொண்டு சாரங்கி படவா, கூத்தாடிப்பயலே என்று ஆயிரக்கணக்காய் வார்த்தைகளைக்கொட்டி அவள் வீணையை என் தலையில்போட்டு உடைத்தாள் என்றான்.

இவைகளை யெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த பெட்ருஷியோ, "ஓகோ, அவள் வெகு தைரியசாலியாய்க் காணப்படுகிறாள். அவள் பேரில் பதின்மடங்காய் என் காதல் அதிகரிக்கிறது. உடனே அவளுடன் வார்த்தையாட ஆவல் கொண்டிருக்கிறேன்" என்றான்

பப்திஸ்தா உபாத்தியாயரைப் பார்த்து "ஐயா, பொறுத்துக்கொண்டு என்னுடன் வாரும். என்

சிறிய மகளுக்கு வீணை கற்பியும். அவள் தான் அதைக் கற்கத் தகுந்தவள். நன்மை செய்தவர்களுக்கு நன்றியறிதல் காட்டக்கூடியவள் அவளே. ஐயா பெட்ருஷியோ நீரும் எங்களுடன் வருகிறீரா அல்லது என் மகள் கத்தரினுளை இவ்விடம் அனுப்பட்டுமா" என்றார். அதற்கு பெட்ருஷியோ "தாங்கள் தயவு செய்யுங்கள், இவ்விடத்திலேயே காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி தகப்பனையும் உபாத்திபாயரையும் அனுப்பிவிட்டு பின் வருமாறு ஆலோசிக்கத் தொடங்கினன். "அவள் வந்தவுடன் தைரியமாய் அவள் காதலை நாடுவேன். அவள் என்னை வைதால் அவள் தொனி குயிலோசைபோல் இன்பமாயிருக்கிறதென்பேன். என்னைக் கோபமாய்ப் பார்த்தால் அவள் முகம் பனித்துளிகளால் சுத்திசெய்யப்பட்டு புதிதாய் மலர்ந்த ரோஜா புஷ்பத்துக்குச்சமானமென்பேன் என்னுடன்பேசாமல் ஊமையைப்போலிருந்தால் அவள் வாய்ச்சாலத்தைப் புகழ்ந்து அவள் வார்த்தைகள் என் இருதயத்தை ஊடுருவிச் செல்லுகிறதென்பேன். அவள் என்னை ஓடிப்போகச் சொன்னல் ஒரு வாரத்திற்குத் தன்னருகிலேயே இருக்கச்சொன்னதுபோல் அவளை ஸ்தோத்கரிப்பேன். அவள் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேனென்றால், எப்போது *ஓலைபோடுகிறது, எப்போது கல்யாணம்

---

* எத்தேசத்தனராயினும் கிருஸ்தவர்களுக்குள் கல்யாணம் செய்துகொள்ளத் தொடங்குகையில் செய்யப்படும் முதல் ஏற்பாடு (Declaration of Banns) ஓலை போடுகிறது. அதாவது அடுத்து மூன்று ஞாயிறு கோவி

வைத்துக்கொள்ளுகிறதென்று கேட்பேன்" என்று இவ்விதமாக சிந்தித்துக்கொண்டிருக்கும் போதே அவள் தகப்பனால் அனுப்பப்பட்ட கத்தரினாள் பெட்ருஷியோவிடம் வந்துசேர்ந்தாள். அவளைக்கண்டதும், நேசத்தின் மிகுதியால் செல்லப்பெயரிட்டு கத்தியென்று அழைத்து, "கத்தி, உனக்கு வந்தனம். உன்னைக் கத்தியென்று அழைக்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான்.

கத்தரினாள்:—நன்றாய்க் கேள்விப்பட்டீர். என்னைப்பற்றி பேசுகிறவர்கள் என்னைக் கத்தரினாள் என்பார்களே தவிர கத்தி யென்பதில்லை என்றாள்.

பெட்ருஷியோ:— இல்லை இல்லை நீ பொய் சொல்லுகிறாய். உன்னைச் சாதாரணமாய் கத்தி யென்றுதான் கூப்பிடுகிறார்கள். அழகுள்ள கத்தி ஒருக்கால் கருக்குள்ள கத்தி என்பார்களோ? நீ எனக்கு கத்திதான். இப்பூலோகத்திலேயே அழகுள்ள கத்தி நீதான், கத்தி மாளிகையில் அவதரித்த கத்தி. தித்திக்கும் கத்தி, மனத்தை மகிழச்செய்யும் என் கத்தி. நான் சொல்வதைக்கேள். உன் சாந்தகுணமும், உன் பொறுமையும், உன் அழகும் ஊரெங்கும் புகழக் கேட்டு உன்னை நேரிலேயே

---

வில் நடக்கும் காலை ஆராதனைகாலத்தில் பிரதான குரு "இன்னான் இன்னாளைக் கல்யாணம் செய்துக்கொள்ளப் போகிறான். இக்கல்யாணத்திற்கு யாதொரு விக்கினங்களிருந்தால் தம்மிடம் அறிவிக்க வேண்டுமென்று பிரகடனம் செய்வார்".

கண்டு என் மனைவியாக்கிக்கொள்ளவேணுமென்னும் ஆசையால் அசைக்கப்பட்டு ஓடிவந்தேன் என்றான்.

கத்தரினாள்:— நன்றாய் அசைக்கப்பட்டாய். உன்னை இங்கே அசைத்துக்கொண்டுவந்தவனே இவ்விடமிருந்து வெளியே கொண்டுபோகட்டும், உன்னைப் பார்த்ததுமே நீ அசைக்கப்படும் பொருளென்று அறிந்துகொண்டேன்.

பெட்ருஷியோ:—அசைக்கப்படும்பொருளென்றால் அது என்ன?

கத்தரினாள்:—ஒரு மணை யென்று வைத்துக் கொள்ளேன்.

பெட்ருஷியோ:—நன்றாய்ச் சொன்னாய்; ஆம் நான் உமக்கு மணைதான்; என்மேல் வந்து உட்காரு, நான் உன்னைச் சுமக்கிறேன்.

கத்தரினாள்:—சுமக்கப் பிறந்தது கழுதை. நீயும் ஒரு கழுதை" என்று பலவாறாகப் பெட்ருஷியோவைத் திட்டி அந்த ஊரார் தனக்கு வைத்தி பஜாரி கத்தரினாள் என்னும் பெயர் தகுதியெனக் காட்டி அவனை அடித்துத் துரத்தப்பார்த்தாள். அதற்கெல்லாம் சற்றும் மனந்தளராமல் அவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் பரிகாசமாய் பதிலளித்து "என்னரும் கத்தி, நீ வெகு நாணமுடையவளெனக்காண்கிறேன். நீ ஒரு முரட்டுக் கோபக்காரியெனச் சிலர் சொன்னார்கள். அவ்வெல்லாம் பொய்யென்று இப்போதுதான் காண்

கிறேன். என்ன ஆனந்தம்! என்ன விளையாட்டு! என்ன மரியாதை! தளிர்காலத்தில் மலரும் புஷ்பத்திற்குச் சமானமாய் என்ன அமர்ந்த பேச்சு! உன் முகத்தில் சற்றாவது கோபக்குறிகள் உண்டா? கோபிஷ்டிகளைப்போல் கடைக்கண் பார்வை உதடு கடிப்புகள் உண்டா? தடுத்துப் பேசுவதுண்டா? உன்னை நாடி வருகிறவர்களைக் களிப்பிப்பதில் என்ன சாந்தம்! என்ன சம்பாஷணை! என்ன அரவணைப்பு! இப்படியெல்லாமிருக்க என் கத்தி கெட்டவளென்று ஏன் சொல்லவேண்டும்? இந்தப்பூலோகமே தூஷணை நிறைந்தது! தாமரைக் கொடிபோன்ற மெல்லியாள் என் கத்தி, நிறத்திலும் ருசியிலும் மாம்பழத்தை ஒத்தவள். அவள் நடையழகோ! எங்கே நடந்து காட்டு."

கத்தரினாள்:—போ, மடையா, நீயா எனக்குக் கட்டளை இடுகிறது.

பெட்ருஷியோ:—என் கத்தி, தன் அழகிய நடையால், இந்த அறையை அலங்கரிப்பதுபோல் வருமா ரதிதேவியும் தன் சோலையில் உலாவுவது.

கத்தரினாள்:—இதெல்லாம் நீ எங்கே கற்றுக் கொண்டாய்?

பெட்ருஷியோ:—இதெல்லாம் நான் கற்றுக் கொண்டதா? என்னையும் மிஞ்சிவரும் சாதுர்ய வாக்கு. இதெல்லாமிருக்கட்டும்: ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறேன். உன் தகப்பனார் உன்னை எனக்குக் கல்யாணஞ் செய்து கொடுப்பதாகச் சம்ம

த்துக்கொண்டார். உன்னுடைய ஸ்திரீ தனமும் ஏற்பாடாய்விட்டது. வேண்டும் வேண்டாம், நான் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்வது நிச்சயம். என் கத்தி, உனக்குப் புருஷன் நான்தான்; என்னைத் தவிர வேறே எவனுக்கும் உன்னைக் கல்யாணஞ் செய்து கொடுப்பதில்லை உன்னைச் சாதுவாக்கப் பிறந்தவன் நான்தான். ஓர் முரட்டுக் கத்தியைக் குடித்தனத்திற்கு ஏற்ற கத்தியாக்க வல்லவன் நானே இதோ உன் தகப்பனார் வருகிறார்; நீ மாட்டேனென்று சொல்லாதே. நான் கத்தரினாளைத் தான் என் மனைவியாக்கிக்கொள்வேன், அவசியம் செய்வேன்.

இப்படியாக இருவரும் சம்பாஷித்துக்கொண்டிருந்த இடத்திற்கு பப்திஸ்தா வந்து "ஐயா பெட்ருஷியோ என் மகளோடு உம்காரியம் என்ன வாயிற்று." என்றான்.

பெட்ருஷியோ:— நன்காயிற்று; நன்காகாமலென்ன? நானும் தவறுகிறதுண்டா?

பப்திஸ்தா:—(மறுபடியும் தன் மகளை நோக்கி) கத்தரினாள், என் மகளே, என்ன கோபமா?

கத்தரினாள்:— (மிகக் கோபத்தோடு) இந்த அரை வெறியனுக்கு என்னைக் கல்யாணம் செய்து வைக்கும் எண்ணத்தைக்கொண்ட உமக்கு என்னை மகளென்றுகூட அழைக்க வாயிருக்கிறதா? இவனொரு முட்டாள் பாதகன். ஆணையிட்டு காரியத்தை முடித்துக்கொள்ளப்பார்க்கிறான்.

(அதற்குள்) பெட்ருஷியோ:—மாமா, இப்படித்தான் நீங்களும் அவளைப்பற்றி பேசின எல்லோரும் அவ்வளை நிந்தனையாகப் பேசினீர்கள். அவள் கோபக்காரியைப்போலக் காட்டியது முற்றும் தந்திரோபாயம். அவள் அடக்கமற்றவளா? ஒருக்காலுமில்லை ஓர் மாடப்புறாவுக்கொத்த நாணமுடையவள். அவள் கோபியா? அல்ல. விடியற்காலத்திலடிக்கும் இளந்தென்றலுக்கொத்த மொழியாள். பொறுமையில் தாராமதிக்கும் கற்பில் அருந்ததிக்குமேச்சமானமானவள். ஓரே வார்த்தையில் எங்களிருவருக்குள்ள ஒற்றுமையால் அடுத்த ஞாயிறே என்னைக் கட்டிக்கொள்வதாய் சம்மதித்தாள்.

கத்தரினாள்:—ஆம், அடுத்த ஞாயிறே உன்னை கட்டையிலேவைக்கச் சம்மதித்தேன்.

பப்திஸ்தாவின் சிறிய மகளைக் கட்டிக்கொள்ள அவ்விடம் சுற்றிக்கொண்டிருப்பவர்களில் ஒருவனாகிய கிறேமியோ (Gremio):—பெட்ருஷியோ, கேட்டாயாஉன்னைக் கட்டையிலேவைக்கச் சம்மதித்துக்கொண்டாளாம்.

மற்றொருவனாகிய திராணியோ (Tranio):—இதுதானா நீர் அவளை இணங்கச் செய்தது?

பெட்ருஷியோ:— ஐயன்மீர், பொறுமையாயிருங்கள். நானல்லவோ அவளை எனக்கேற்ற மனைவியாகத் தெரிந்துகொண்டேன்? நானும் அவளும் வேடிக்கையாய்பேசிக்கொண்டால் உங்களுக்கென்ன?

நாங்களிருவரும் தனித்திருக்கும்போது வெளியில் எல்லோர்க்கும் எதிரே கோபக்காரியைப்போல் காட்டவேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டோம். அவள் என்னை எவ்வளவு நேசிக்கிறாள் என்பதை நீங்கள் நம்பவே மாட்டீர்கள். ஓ! என் அன்புள்ள கத்தி என் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தத்தின்மேல் முத்தம் கொடுத்து ஆணைமேல் ஆணையிட்டு அவள் எப்படி தன் காதலை வெளிப்படுத்தினாளென்றால், ஒரு நிமிஷத்தில் என்னை மயக்கி அவள் நேசத்தினடிமையாக்கிக்கொண்டாள். என் கத்தி, எனக்கு உத்தரவுகொடு; நான் வேனிஸ்நகரம்போய் கலியாணத்திற்கு வேண்டிய உடைகள் தயாரித்துக் கொண்டு வருகிறேன். மாமா நீங்கள் கலியாணத்திற்கு ஆயத்தஞ்செய்யுங்கள். எல்லோருக்கும் கலியாண அழைப்புப் பத்திரமனுப்புங்கள். என் கத்தரினாள் வெகு நேர்த்தியாய்க் காணப்படுவாள் என்பது நிச்சயம்.

பப்திஸ்தா என்ன பதிலுரைப்பதென்று தோன்றாமல் "பெட்ருஷியோ உனக்கு மங்களமுண்டாகுக அப்படியே செய்கிறேன்" என்றான். பியான்காவின் காதலர்களாகிய திராணியோ, கிறேமியோ இருவரும் "அப்படியே நடந்தேறக்கடவது. நாங்களிருவரும் இக்கல்யாணத்திற்கு சாக்ஷிகளாயிருப்போ" மென்றார்கள்.

பெட்ருஷியோ "மாமா, என் மனைவி, ஐயன்மீர், உங்கள் எல்லோரிடத்திலும் உத்தரவு வாங்கிக்

கொள்ளுகிறேன். நான் வேனிஸ் நகரம் போகிறேன். ஞாயிறு நெருங்கிவருகிறது. மோதிரங்களும் நகைகளும் நேர்த்தியான உடைகளும் வாங்கிவருவேன். என் கத்தி, அடுத்த ஞாயிறுக்கு நாம் புருஷனும் பெண்சாதியுமாவோம். எனக்கோர் முத்தம்கொடு" என்று கத்தரினாள் கையைப் பிடிக்க அவள் உதறிவிட்டு வெகுகோபத்தோடு வீட்டிற்குள் சென்றாள். பெட்ருஷியோவும் வெளியில் போய்விட்டான்.

கிறேமியோ:—எப்போதாவது இவ்வளவு அவசரத்தில் யாதொரு கலியாணம் கூடிற்று?

பப்திஸ்தா:—நிஜமாகவே இப்போதுதான் நான் ஓர் வியாபாரிக்குள்ள தந்திரத்தொழிலைச் செய்கிறேன். வெகு தைரியமாய் இந்த ஆபத்துக்கிடமான வியாபாரத்தில் இறங்கிவிட்டேன்.

திராணியோ:—ஆம் வெகு நாளாய் விலையாகாமல் உம்மிடத்தில் வட்டிக்கு நஷ்டமாய்க்கிடந்த பொருள்; அது ஒருக்கால் லாபத்தைக் கொண்டு வந்தாலும் கொண்டுவரும் அல்லது துன்பக்கடலில் மூழ்கடித்தாலும் அடிக்கும்.

பப்திஸ்தா:—எப்படியாவது கலியாணம் ஆனால் அதுவே எனக்கு லாபம்.

கிறேமியோ "அதற்கென்ன தடை; அவன் பிடித்தபிடி கெட்டிப்பிடிதான்" என்றான். கத்தரின

ளின் தகப்பனுகிய பப்திஸ்தாவுக்கு அவளை எப்படி யாவது தொலைத்துவிட்டால் போதுமென்றிருந்ததி ஞல் அவ்வாறு கூறலானுன் என்று எல்லோருமறி வார்கள்.

## II.

உலகத்திலுள்ள அதிசயங்களிலொன்ருகிய சாய்ந்த கோபுரத்தைத் தனக்கு ஆபரணமாகப் பூண்ட பைசா (Pisa) நகரத்தில் வின்சென்ஷியோ (Vincentio) வென உயர்குலத்திலுதித்த ஓர் பிரபு இருந்தார். அவருக்கு லுசென்ஷியோ (Lucentio) வென ஒரு செல்வ புத்திரனிருந்தான். அவனுக்குத் தான் சம்பாதித்த திரவியத்தைமட்டும் தனக்குப் பிற் காலம் விட்டுப்போக மனம் வராமல் அத்திரவியத் திற்கோர் ஆபரணமாய் விளங்க கல்விச்செல்வத்தை யும் புண்ணிய நெறிகளையும் தேடிவைக்க விரும்பி அவனை பதுவைமாநகர் சர்வ கலாசாலைக்கு அனுப்பி ஞர். லுசென்ஷியோ (Lucentio) தன் தகப்பனுரு டைய ஆசீர்வாதங்களைப்பெற்று திராணியோ (Tranio) பியோண்டேல்லோ (Biondello) என இருவே லைக்காரர்களுடன், பதுவை பட்டணம் வந்துசேர்ந்து வசதியான ஓர் இடத்தில் தங்களுக்கோர் விடுதி அமைத்துக்கொண்டு பட்டணம் சுற்றிப் பார்க்க வெளியே புறப்பட்டார்கள். அப்பட்டணத்தின் விசேஷங்களில் ஒன்ருய் பப்திஸ்தாவின் குடும்ப சமாச்சாரங்களும் தெரிந்துகொண்டார்கள்.

இளையவளாகிய பியான்கா (Bianca) வின்

அழகு நற்குணங்களைக் கண்டு அவள் காதலை நாடி அனேகர் சந்திரனைச்சுற்றிய தாரகைக் கூட்டங்கள் போல அவளைச் சூழ்ந்துகொண்டிருப்பதைக் கண்ட லூசென்ஷியோவும் அவளைக் கலியாணம் செய்து கொள்ளவேணுமென்று ஆசைகொண்டான். அவளருகிலிருந்து அவளுக்கூழியம்செய்து அவளுடைய அந்தரங்க குணங்களை அறிய தன் அந்தஸ்து இடங்கொடாதென எண்ணி, தன் வேலைக்காரர்களிலொருவனாகிய திராணியோவுக்கு தன்உடைகளைக்கழற்றிப் போட்டு தான் அவனுடைகளை உடுத்தி காம்பியோ (Cambio) என பெயர் தரித்துக்கொண்டு பப்திஸ்தாவின் இளைய மகளாகிய பியான்காவுக்கு அன்னிய பாஷை கற்பிக்கும் உபாத்தியாயர் அலுவலில் அமர்ந்தான். தன் எஜமானுடைய உடைகளைப்பூண்ட திராணியோ தானே பைசா நகரத்து வின்சென்ஷியோவின் குமாரனாகிய லூசென்ஷியோ வென தன் எஜமானன் உத்தரவுப்படி நடித்துவந்தான்.

இப்போலி லூசென்ஷியோவும் பியான்காவை மணக்க சுற்றித்திரிந்த அனேக காதலர்களிலொருவனாய் அடிக்கடி பப்திஸ்தாவின் வீட்டிற்குச்சென்று தன் ஆஸ்திகளையும் உயர்குலப் பெருமையையும் கூறி தனக்கு அவளை விவாஹம் செய்து வைக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தான்.

பியான்காளின் காதலர்களில் ஒருவனாகிய ஓர்டேன்சியோ (Hortensio) சங்கீதங் கற்றுக்கொடுக்க அமர்ந்து இவள் தமக்கையிடம் ஏற்கனவே நாம்கூறிய

படி மரியாதை பெற்றுக்கொண்டு இப்போது இவளுக்கு சங்கீதங் கற்றுக்கொடுப்பவன்போல் இவளுடைய நேசத்தைப்பெற பியான்காவிடம் வந்தான். லூசென்ஷியோவும் காம்பியோ (Cambio) என மறு பெயர் பூண்டு பியான்காவுக்கு ஸம்ஸ்கிருத பாஷை கற்றுக்கொடுப்பதாக வந்தான். இவ்விருதிறத்தாரும் நான் முன், நீ முன் என்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

லூசென்ஷியோ:—சாரங்கி நில், நீ நிரம்ப அவசரப்படுகிறாய். அவள் தமக்கை கத்தரினாளிடம் நீ பெற்ற வரிசையை அவ்வளவு சீக்கிரத்தில் மறந்தனையோ?

ஓர்டென்சியோ:—வாதாடும் பண்டிதா, இப்பெண்மணி தெய்வீக ஸ்வர சம்ரக்ஷணி என அறியாயோ? ஆகையால் எனக்கு முதலில் இடங்கொடு ஓர் மணிநேரம் சங்கீதத்தில் செலவழித்தபிறகு உன் போதனைக்குச் சவகாசமிருக்கும்.

லூசென்ஷியோ:—சங்கீதம் என்னத்திற்காக ஏற்பட்டதென்று அறிந்துகொள்ளாமல் கழுதை போல் உதைத்துக்கொள்ளுகிறாய். படிப்பு அல்லது முக்கிய உழைப்பிற்குப்பிறகு மனிதனுடைய ஆயாசத்தை நீக்க ஏற்பட்டதல்லவோ சங்கீதம்? ஆகையால் முதலில் அவளுக்கு நான் ஸம்ஸ்கிருதம் கற்பித்த பிறகு உன் கீதத்தைப் பிரயோகி.

ஓர்டென்சியோ:—அடே உன் சாமார்த்தியத்தை என்னிடம் காட்டாதே.

பியான்கா:—என் இஷ்டத்தைப்பற்றிய விஷயத்தில், ஐயன்மீர் நீங்கள் ஏன் இப்படி சண்டை செய்துகொள்ளவேண்டும்? நான் பிரம்படிபடும் பள்ளிக்கூடத்துக் குழந்தையல்ல. நான் குறித்த நேரத்திற்கும், மணிக்கும் கட்டுப்பட்டவளல்ல. எனக்கிஷ்டம்போல் என் பாடங்களைப் படிப்பேன். உங்கள் சண்டையைநிறுத்துங்கள். நீர்உம்முடைய வீணைக்கு ஸ்ருதி கூட்டும். நீர் உம்முடைய வீணையைச் சரிப்படுத்தும் வரையில் நான் ஸம்ஸ்கிருதம் படிப்பேன்.

ஓர்டெசின்யோ:—நான் சரியான ஸ்ருதியில் வந்தவுடன் உம்முடைய உபதேசத்தை நிறுத்திவிடவேண்டும்.

லுசென்ஷியோ:—அது தான் ஒருபோதுமில்லை; நீர்போய் ஸ்ருதிகூட்டும்.

ஓர்டென்சியோ போனவுடன் பியான்கா லுசென்ஷியோவைப் பார்த்து நாம் முன் எவ்விடத்தில் விட்டோம் என்று கேட்டாள்.

லுசென்ஷியோ: "அம்மணி இவ்விடத்தில் தான்" என்று ஓர் சுலோகம் ஆரம்பித்தான்.

வித்வத்வம் ச ந்ருபத்வம் ச நைவ துல்யம் கதாசன!
ஸ்வதேசே பூஜ்யதே ராஜா வித்வான் சர்வத்ர பூஜ்யதே!!

பியான்கா:—இதற்கென்ன அருத்தம்.

லுசென்ஷியோ:—வித்வத்வம் ச—பைசா நக

ரத்து; ந்ருபத்வம் ச—வின்சென்ஷியோவின் மகனுகிய; நைவ—நிஜ லூசென்ஷியோவாகிய நான்; துல்யம் கதாசன — உன் காதலைப்பெற இவ்வேஷம் கொண்டுவந்தேன்;

ஸ்வதேசே—லூசென்ஷியோவென; பூஜ்யதே ராஜா—உன் காதலைப்பெற வருபவன்; வித்வான்—என் வேலைக்காரனுகிய திராணியோ; சர்வத்ர பூஜ்யதே—எல்லாம் கிழவனை ஏமாற்ற; என்று அச்சுலோகத்துக்குஅருத்தம்சொல்லிக்கொண்டிருக்கும் போது ஓர்டென்சியோ திரும்பிவந்து "அம்மணி, என்வீணைக்கும் ஸ்வரம் அமைத்தாயிற்று" என்றான்.

பியான்கா "எங்கே தட்டு பார்ப்போம் (ஓர்டென்சியோ வாசிக்க) சீ, சீ, அது காதுக்கினிமையாய் சப்திக்கவில்லை. பஞ்சமம்பதருகிறது" என்றாள்.

அதற்கு லூசென்ஷியோ "போய் எச்சல் தொட்டு இன்னம் கொஞ்சம் முடுக்கு" மென்றான்.

பியான்கா:—உம்முடைய பாடம் எனக்குவிளங்கிற்று பாரும்.

வித்வத்வம் ச ந்ருபத்வம் ச—உம்மை நான் அறியமாட்டேன்; நைவ துல்யம் கதாசன—உம்மை எப்படி நம்புவேன்; ஸ்வதேசே பூஜ்யதே ராஜா—நாம் பேசிக்கொள்வதை அவன் கேட்கப்போகிறான் எச்சரிக்கை; வித்வான் சர்வத்ர பூஜ்யதே—என்னவானு

னும் நீர் அவநம்பிக்கைப்படவேண்டாம்; என்றுதான் அவன்மேல்கொண்ட ஆசையையும் ஒருவாறு வெளிப்படுத்தினாள்.

ஓர்டென்சியோ :—அம்மணி இப்போது சரிவர ஸ்வரம் ஏற்றியாயிற்று.

லுசென்சியோ:—ஆம் மந்தஹாரத்தை தவிர,

ஓர்டென்சியோ "மந்தஹாரம் சரியாய்த்தானிருக்கிறது. உன் மந்த புத்திதான் தடுமாறி நிற்கிறது" என்று, தனக்குள்ளே அந்தப்போக்கிலி அவளிடம் தன் காதலைத் தெரிவிக்கிறான் என்று எண்ணி "அடே வாத்தி! உன்செய்கைகளை நான் கவனித்துக் கொண்டுதானிருக்கிறேன்" என்றான்.

இப்படியே பியான்காவை கலியாணஞ்செய்து கொள்ளவந்த ஒவ்வொருவனும் அவள் காதலைப்பெற ஒருவருக்கொருவர் போட்டி போட்டார்கள்.

பியான்காவின் தகப்பனாகிய பப்திஸ்தா பைசா நகரத்து பிரபுவாகிய வின்சென்ஷியோவை நன்றாய் அறிவார். அவருடைய ஆஸ்தியையும் அவருடைய குலப் பெருமையுமே அவரை மயக்கிற்று. ஆகையால் தன் இளைய மகளாகிய பியான்காவை அந்த வின்சென்ஷியோவின் மகனுக்கு கலியாணஞ்செய்து வைத்துவிட்டால் தானும் குலத்தினுயரலாமென்றும் தன் மகளும் திரண்ட ஐசுவரியத்தைப் பெறுவா

னென்றும் எண்ணி லூசென்ஷியோவென போலி நாமம் கொண்ட நிஜ லூசென்ஷியோவின் வேலைக் காரனாகிய திராணியோவுக்குத் தன் மகளைப் பாணிக் கிரஹணம் செய்துவைக்கத் தீர்மானித்துக்கொண்டு கலியாண உடன்படிக்கைகளைத் தீர்மானிக்க அவன் தகப்பனென்று நினைத்துக்கொண்டிருக்கும் பைசா நகரத்து பிரபு வின்சென்ஷியோவை வரவழைக்கும் படி கேட்டுக்கொண்டான்.

## III.

கத்தரினாள் மண நாள் வந்தது. விருந்தினர் சகலரும் வந்து சேர்ந்தார்கள். சண்டைக்காரியான கத்தரினாளுக்கும் ஓர் புருஷன் கிடைத்தானே அவன் எப்பேர்ப்பட்டவனாயிருக்கவேண்டுமென்னும் ஆச்சரியமே அநேகரை இக்கலியாணத்திற்குவரச்செய்தது. கலியாணத்திற்குவேண்டிய சகல கைங்கரியங்களும் சேகரமாயின. ஆனால் மாப்பிள்ளை பெட்ருஷியோ மட்டும் இன்னும் வரவில்லை. எங்கே ஒருக்கால் தன் சிநேகிதர் வீட்டில் வந்து இறங்கி யிருப்பானோ என்று பப்திஸ்தா ஆள்விட்டு தெருத்தெருவாய் வீடு வீடாய் தேடிப் பார்த்தான். எங்குங் காணமல் மிக்க விசனத்தில் ஆழ்ந்து "ஐயா லூசென்ஷியோ, நம் கத்தரினாள் பெட்ருஷியோவை மணம்புரியும் நாள் இதுவே. நம்முடைய மருமகன் வந்ததாக மட்டுந்தெரியவில்லை. எல்லோரும் என்ன சொல்லு வார்கள் ? கலியாணத்திருச்சடங்கை நிறைவேற்றும் குரு மாப்பிள்ளை எங்கே என்றால் என்ன பரியாசத் திற்கிடமாகும் ? லூசென்ஷியோ, நமக்குவந்த இந்த

அவமானத்தைப் பார்த்தாயா?" என்ருன். அதற்கு கத்தரிஞள் "எனக்குத்தான் அவமானம். சுத்த மதிகேடஞன ஓர் பயித்தியக்காரனுக்கு என் இஷ்டத்திற்கு விரோதமாய் என்னை நிச்சயதார்த்தஞ் செய்து விட்டீர். அவன் என்னை அவசரத்தில் காதலித்து சவகாசத்தில் கலியாணஞ் செய்துகொள்வதாக எண்ணிவிட்டான். ஐயோ நான் சொன்னேனே. வேடிக்கையான பேச்சுகளால் தன் முட்டாள்தனத்தை மூடிவைக்கும் ஓர் பெரிய வெறியனென்று நான் முன்னமே சொன்னேனே. தான் வெகு கெட்டிக்காரனென்று காட்ட ஆயிரம்பேரைக் காதலித்து கலியாண நாள் குறித்து சிநேகிதரை அழைக்கச் செய்து விவாகப்பிரகடனம் செய்து கலியாணஞ்செய்யாமல் போவான். வெறியன் பெட்ருஷியோ தனக்கு இஷ்டமானபோது வந்து கலியாணஞ்செய்துகொள்ள வைத்திருக்கும் கையிருப்பு மனைவி இதோ போகிருள் என்று இப்பூலோகம் என்னைச் சுட்டிக்காட்டவோ!" என்று ஓலமிட்டாள்.

லூசென்சியோவின் பெயரையும் உடைகளையும் தரித்த திராணியோ "கத்தரீன் என்னும் நல்லாளே, ஐயா பப்திஸ்தா இருவரும் பொறுமையாயிருங்கள். பெட்ருஷியோ நல்லவனே. அவன் சொல்லியபிரகாரம் இவ்விடம் வராமலிருக்க என்ன தடை நேரிட்டதோ? நாம் அறியோம். அவன் மூடனுப் காணப்பட்டாலும் அவன் வெகு புத்திசாலி. வெகுளித்தனமாய்ப்பேசினலும் அவன் வெகு நேர்மையுள்ளவன்" என்ருன்.

கத்தரினாள் "ஏனோ அவன் முகத்தில் விழித்தேன்!" என்று கதறினாள்.

பப்திஸ்தா "ஐயோ மகளே, நீ அழுவது தப்பிதமென்று சொல்லமாட்டேன். இத்தீங்கு சுத்த புனிதவதியையும் வருத்தக்கூடியதாயிருக்க வெகு கோபக்காரியாகிய நீ என்னபண்ணுவாய்?" என்று தேற்றினான்.

அப்போது லுசென்சியோவின் மற்றொரு வேலைக்காரனான பியோன்டெல்லோ (Biondello) ஓடிவந்து "ஐயா நீங்கள் கேட்டிராத பழைய சேதி" என்றான். இவனுடைய வேடிக்கையான கொச்சை மொழிகளைக் கேட்பதில் பப்திஸ்தாவுக்கு அதிக பிரியம். தன்னுடைய விசித்திர சம்பாஷணைகளால் எல்லோரையும் சந்தோஷப்படுத்துவான். இவனைக் கண்டதும் பப்திஸ்தாவுக்கு ஆறுதலா யிருந்தது.

பப்திஸ்தா:—நாங்கள் கேட்டிராத செய்தி, புதுசெய்தி, ஒரே சமயத்தில் உன் செய்தி எப்படி புதுசும் பழசுமாயிருக்கும்?

பியோன்டெல்லோ:—என் பெட்ருஷியோ வராங்கே எங்கிறது புது சேதியில்லே?

இதைக் கேட்டதும் பப்திஸ்தா: "வந்துவிட்டாரோ?" என்று ஆவலோடே கேட்கலாயினார்.

பியோன்டெல்லோ:— இல்லிங்கே ஐயா இல்லிங்கே.

பப்திஸ்தா:—நீ சொன்னாயே?

பியோன்டெல்லோ:—வந்துகினே இருக்காங்கே.

பப்திஸ்தா:—எப்போது இவ்விடமிருப்பார்?

பியோன்டெல்லோ:— இங்கிட்டே நின்னுகினு எம்மாதிரி பாக்கிறச்சே.

திராணியோ:—எங்கே பழையசெய்தி என்றாயே அதைச் சொல்லு.

பியோன்டெல்லோ:— பெட்ருஷியோ வாராங்கேளா? அவுங்கே தொப்பி புதுசு, கோட்டுதான் பளசு. அவுங்கே கால்சொக்கா இருக்குதெல்ல? அது மூணுவிசை திலுப்பி திலுப்பி தச்சது. அவங்கே பூடுசு மொளுக்குவத்தி பாக்கட்டுதேன், அது தேன் பூட்டுசு இண்ணு வச்சிக்குங்களேன். ஒண்ணுலே லேசுபோட்டிருக்கிறேன். இன்னொண்ணுலே புக்களுசு வெச்சிருக்கிறேன். இடுப்பிலே துருப்பிடிச்ச கத்தி ஒண்ணு மாட்டிருக்கிறேன். அரமணை கத்திதான். பிடிமாத்திரம் ஒடைஞ்சது. குருதையிலே பளசு சேணம்போட்டு குந்திகினு வாராங்கே. அந்த குருதைக்கு மேலே எல்லாம் காளைகட்டி முட்டிதட்டுது.

பப்திஸ்தா:—போதும்போதும் அவருடன் யார் வருகிறது?

பியோன்டெல்லோ:— என்ங்க அவங்கவேலைக்காரன்தேன். குருதைக்கு சேணம் மாட்ணுபேல மாட்டிகினு இருக்கேன். ஒரு காலிலே செருப்பு ஒரு காலிலே பூட்டுசு மாட்டி இருக்கேன். அவனை பாத்தா ஒரு எஜமாங்க வேலைக்காரனுட்டுமா? பூத மாட்டமிருக்கேன்.

திராணியோ:—இவைகளெல்லாம் ஒருபோக்கு. ஒவ்வோர் சமயத்தில் வேடிக்கைபார்த்தமாக கிழிந்த உடுப்புடன் வெளியே உலாவப்போவார்.

பப்திஸ்தா.—எப்படி வந்தாலும் அவர் வருகிற செய்தி எனக்குச் சந்தோஷத்தைத் தருகிறது.

பியோன்டெல்லோ:— அவர் வல்லிங்களே.

பப்திஸ்தா:—அவர் வருகிறாரென்றாயே?

பியோன்டெல்லோ:— யார்? பெட்ருஷியோ வாராங்கிண்ணு சொன்னேன்?

பப்திஸ்தா:— ஆம், பெட்ருஷியோ வருகிறாரென்று இப்போது சொல்லவில்லையோ?

பியோன்டெல்லோ:— இல்லிங்க ஐயா அவங்கே குருதைதான் வருகிறது. குருதைமேலே அவுங்கே குந்தியிருக்காங்கே.

பப்திஸ்தா:—எல்லாம் ஒன்றுதானே.

பியோன்டெல்லோ:—அட ஆண்டவனே! அதெப் படி ஒண்ணு? ஒரு காசு இண்ணாலும் பந்தியங் கட்டறேன். குருதை ஒண்ணு மனுசன் ஒண்ணு எப்படியும் ஒண்ணுக்குமேலேதானே?

இதற்குள்ளாக பெட்ருஷியோவும் அவர்வேலைக் காரனும் வீடு வந்துசேர்ந்து "வீட்டில் யார்? எல் லோரும் எங்கேயென்று கதவைத்தட்ட, பப்திஸ்தா: வாருமென்று வரவு கூறினான். விருந்தினர் எல்லா ரும் அவனுடையைக் கண்டு அதிசயித்தார்கள். முகத்தைச்சுளித்துக்கொண்டார்கள். திராணியோ மட்டும் "ஐயா உம்முடைய உடை சந்தர்ப்பத்துக் கேற்றதாயில்லை" யென்றான்.

அதற்குப் பெட்ருஷியோ:— ஆமாம் பரவா யில்லை. ஆனால் என் கத்தி எங்கே? என் அழகு மணப்பெண் எங்கே? மாமா என்னமாயிருக்கிறீர் கள். ஐயன்மீர் நீங்கள் கோபமாயிருக்கிறதாகத் தோற்றுகிறது. அதிசய வால்நக்ஷத்திரத்தைக்கண் டதுபோல் ஏன் எல்லோரும் என்னை வெறிக்கப் பார்க்கிறீர்கள்.

பப்திஸ்தா:—ஐயா இது உம் மணநாளன்றோ? நீர் எங்கே வராமல்போவீரோவென்று முதலில் பய ந்தோம். இப்போதோ நீர் கொண்ட கோலத்தைக் கண்டு விசனமுற்றிருக்கிறோம். சீ, சீ, உம் அந்தஸ் தைக் குறைத்துக் கலியாணத்திருச்சடங்கை அகௌ ரவப்படுத்துகிற இவ்வுடைகளைக் களைந்தெறியும்.

திராணியோ:—உம் மனைவியைவிட்டு இத்தனை நாள் பிரிந்திருக்கச்செய்து இவ்வகௌரவ உடைகளுடன் உம்மை இவ்விடம் அனுப்பிய அவ்வளவு ஆவசியமான காரியமென்ன ?

பெட்ருஷியோ:—அவைகளெல்லாம் இப்போது எடுத்துரைக்க தங்களுக்கு ஆயாசத்தையும் சலிப்பையும் தரும். ஏதோ முறை தப்பினாலும் என் வார்த்தை தப்பாமல் வந்து விட்டேனே அதற்கு திருப்தி அடையுங்கள். சாவகாசத்தில் இவைகளுக்கெல்லாம் தகுந்த சமாதானம் சொல்லுகிறேன். ஆனால் என் கத்தி எங்கே? அவளை விட்டு வெகு நேரம் பிரிந்திருக்கிறேன். பொழுதுபோகிறது கோவிலுக்குப் போக நேரமாயிற்று.

திராணியோ:—இவ்வகௌரவ உடைகளுடன் மணப்பெண்ணைக் காணப்போகிறீரோ? என் அறைக்கு வாரும், என் உடைகளையாவது தருகிறேன்.

பெட்ருஷியோ:— வேண்டாம், வேண்டாம் இப்படியேதான் போய்ப்பார்ப்பேன்.

பப்திஸ்தா:—இவ்வுடைகளுடன் கலியாணஞ் செய்துகொள்ளமாட்டீரென்று நம்புகிறேன்.

பெட்ருஷியோ "அதெற்கென்ன சந்தேகம் இவ்வுடைகளுடன் தான். ஏன் வீண்வார்த்தை? அவள் என்னையல்லவோ கலியாணஞ் செய்துகொள்

ளப்போகிறாள்? என் உடைகளையா? என் மனைவியைக்கண்டு என் அன்பார்ந்தழுத்தத்தால் அவளுக்கு ஆசிகூறுவதைவிட்டு இவ்விடத்திலேயே உங்களோடு வார்த்தையாடிக்கொண்டு இருக்க என்ன மூடனாயிருக்கிறேன்" என்று சொல்லி தன் பெண்சாதியைத் தேடிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

# IV.

விருந்தினர்களும், சுற்றத்தாரும் என்ன சொல்லியுங் கேளாமல் முன் வேலைக்காரனால் விவரிக்கப்பட்ட உடையோடே பெட்ருஷியோ கத்தரினாளை மணம்புரிய கோவிலுக்கு வந்து சேர்ந்தான்.

மணப்பெண்ணும், மணப்பிள்ளையும் கோவிலினுட்பிரகாரத்து கிராதியண்டை காத்திருக்க இவர்களை ஈசுவரன் கட்டளையால் ஒன்றுசேர்த்தருள நியமிக்கப்பட்ட, பூஜித வயது சென்ற குருவானவர் ஒருவர் அவ்விடம் வந்து மணமகனை நோக்கி: "இவ்விடமிருக்கும்செல்விகத்தரினாளைமணஞ்செய்து கொள்ள சம்மதமோ" என, "எங்கப்பாணை தெய்வசாக்ஷியாய் சம்மதந்தா" னென்று எல்லோரும் பிரமிக்கும்படி உரத்த சத்தமாய்க்கூவினான். பூஜித குருவின் கையிலிருந்த புஸ்தகமும்கீழே விழுந்துவிட்டது. அதைக்கண்ட கத்தரினாள் பயத்தினால் நடுங்கினாள். விவாகத் திருச்சடங்குகள் முடிந்தவுடன் கோவிலை விட்டு வெளியே போகா முலிதிராக்ஷை இரசங்கொண்டுவரச் சொல்லி தன் கன்

யாணத்தைச் சிறப்பிக்க அவ்விடம் வந்தவர்களின் ஆரோக்கியத்திற்காக என்று சொல்லி அந்த இரசத்தைக்குடித்து அடிவண்டலை கோவில் மணியக்காரன் ( Sexton ) தாடியில் விசிறி எறிந்தான். ஏனென்றால் அவன் தாடி பசியினால் மெலிந்து தான் குடிக்கும்போது தனக்கும் கொஞ்சம் இரசம் தரும்படியாய் கெஞ்சினதுபோல் பரிதாபத்தோடு தன்னை நோக்கினதாம். கோவிலைவிட்டு வெளியே வந்து கோவில் வாசற்படியிலேயே தன் நேச மனைவிக்கு அவன் கொடுத்த முத்தம் கோவில் முழுமையும் எதிரொலித்தது. அவ்விடம் வந்தவர்களெல்லாம் இப்படிப்பட்ட பயித்தியங்கொண்ட விவாஹம் தாங்கள் எப்பொழுதும் பார்த்ததில்லை என்று போனார்கள். அப்போது பெட்ருஷியோ விருந்தினர்களை நோக்கி "குலமக்களே, சிநேகிதர்களே, தாங்கள் எடுத்துக்கொண்ட கஷ்டத்திற்கு என் வந்தனம் இன்று என்னுடைய கலியாணவிருந்தருந்த எண்ணி இருக்கிறீர்களென்று நான் அறிவேன். அதற்காக பெரிய விருந்தும் தயார்செய்திருக்கிறீர்களென்றும் தெரியும். என்னுடைய அவசரம், தங்களிடத்தில் இப்போதே செலவு பெற்றுக்கொண்டு புறப்பட அழைக்கிறது?" என்றான்.

"இன்றிரவே நீர் புறப்பட்டுப்போவது கூடுமான காரியமோ ?" என்று பப்திஸ்தா கேட்க.

பெட்ருஷியோ "இப்பொழுதே, பொழுது போகாமுன் போக வேண்டும். நீங்கள் ஆச்சரி

யப்படாதீர்கள். என் வேலையை நீங்களறிந்தால் இவ்விடம் நிற்கிறதைவிட போகவே மன்ருடுவீர்கள். அதிசாந்தமும், மதுரமும், சுசீல சற்குணமும் பொருந்திய என்மனைவிக்கு என்னையே நான் கையளித்த இத்திருச்சடங்கைக் கண்ட கனவான்களே, உங்களெல்லோருக்கும் என் வந்தனம். என் மாமனுரோடு விருந்து அருந்துங்கள். என் ஆரோக்கியத்திற்காக பானம் பண்ணுங்கள். நான்போகவேண்டும், செலவு பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று உடனே தன்ஊருக்குப் போகப்புறப்பட்டான். விருந்தினர் ஒருவர் ஒருவராய் "என்னைப்பற்றியாவது நில்லுங்கள், சாப்பாடு முடியும்வரையிலாவது நிற்கக்கூடாதா?" என்ருர்கள். எல்லோரையும் தடுத்து கூடவே கூடாதென்றுபுறப்பட்டான். கடைசியாய் அவனுடைய மனைவியாகிய கத்தரினுளே வந்து "இவ்விடம் சற்று தங்க சம்மதியீரோ ?" என.

பெட்ருஷியோ "இவ்விடம் தங்கும்படியாய் நீ கெஞ்சுவது எனக்கு சம்மதந்தான். ஆனல் நீ எவ்வளவுதான் கெஞ்சினுலும் நான் இவ்விடம் தங்க சம்மதியேன்." என்ருன்.

கத்தரினுள் "என்பேரில் உமக்கு நேசமிருக்குமாகில் இவ்விடம் தங்கத்தான்வேண்டும்" என்ருள். அதற்கு பதில் சொல்லாமல் பெட்ருஷியோ வேலேக்காரனைக் கூப்பிட்டுத்தன் குதிரையை உடனே கொண்டுவரச் சொன்னுன். அதற்குக் கத்தரினுள் உடனே கோபங்கொண்டு, "அப்படியானுல் நீ செய்

கிறதைச் செய்; நான் இன்றைக்கும் வரமாட்டேன், நாளைக்கும் வரமாட்டேன். எனக்கு எப்பொழுது இஷ்டமோ அப்பொழுதுதான் வருவேன். ஐயா, இதோ கதவு திறந்திருக்கிறது, நீர் போகவேண்டிய பாதைஅது. உம்முடைய செருப்பு தேய்கிறவரையில் நீர் நடந்து கொண்டிருக்கலாம், எனக்கு இஷ்டமாகும் பரியந்தம் நான் வரமாட்டேன். நீர் ஓர் பயித்தியங்கொண்ட முற்கோபி மாப்பிள்ளை என எல்லோரும் எண்ணும்படி நடந்துகொள்ள இஷ்டப்படுகிறதாகத் தோற்றுகிறது'' என்றாள்.

பெட்ருஷியோ:—ஓ! என் கத்தி தயவுசெய்து கோபித்துக்கொள்ளாதே.

கத்தரினாள்:—நான் கோபித்துக்கொள்ளுவேன், உனக்கென்ன? அப்பா நீர் சும்மா இரும். எனக்கு இஷ்டம் வருகிறவரையில் காத்திருக்கட்டும்.

இவர்களுக்குள் உண்டாகிய சச்சரவைக்கண்ட உறவினர்களில் ஒருவன் 'இப்பொழுதுதான் சண்டை துவக்குகிறது. நாம் வேடிக்கைபார்க்கலா'மென்றான்.

கத்தரினாள் ''குலமக்களே, கலியாண விருந்திற்குச் செல்லுங்கள். தடுத்துச்சொல்ல தைரியமற்ற பெண்பிள்ளையை பேதையாக்கலாம். ஒரு கை பார்க்கிறேன்'' என்று ஆர்ப்பாட்டம் செய்தாள்.

அதற்கு பெட்ருஷியோ ''உன் உத்தரவுப்படி என் கத்தி, எல்லோரும் போவார்கள். மணப்

பெண்ணைப்பாதுகாத்து நிற்போரே, அவள்சொற்படி கேளுங்கள். விருந்திற்குச்சென்று நன்ருய்க்குடித்துச்சந்தோஷம் கொண்டாடுங்கள். அவள் கன்னிமைக்குக் கும்பிடுபோட்டு ஓர்நற்பெண்சாதியாகவேண்டுமென்று விரும்புங்கள். பயித்தியங்கொண்டவர்கள் போல் சந்தோஷம்கொண்டாடி கழுத்தில் சுருக்கு மாட்டிக்கொண்டு தொங்குங்கள். ஆனால் என் அழகு கத்தி என்னேடுதானிருப்பாள். ஏண்டாமுகத்தைச் சுளித்துக்கொண்டு வெறிக்கப் பார்க்கிறீர்கள்? எனக்குச் சொந்தமான பொருளுக்கு எஜமான் நானல்லவோ? அவள் என் பொருள்; என் சட்டிப்பானை, அவள் என் வீடு, என் குடித்தன சாமான், என் வயல், என் களஞ்சியம், என் குதிரை, என் எருது, என் கழுதை, என் மற்றென்னவாவது; அவள் இதோ இருக்கிருள். யாராவது அவளைத் தொடுங்கள். என்னைப் பதுவைக்குப் போகவொட்டாமல் தடுக்கிறவன் எவனுயிருந்தபோதிலும், எவ்வளவு பெரியவனுயிருந்தபோதிலும் பார் என்ன செய்கிறேனென்று. அடா குருமியோ கத்தியை உருவடா திருட்டுப்பயல்கள் வந்து சூழ்ந்துகொண்டார்கள். அடா நீ எனக்கு வேலைக்காரனுனால், உன் எஜமானியை அவர்களிடமிருந்து விடுவி. அடி என் நேசக்கண்ணே, பயப்படாதே. என் கத்தி; உன்னை அவர்கள் தொடுவார்களா பார்ப்போம். ஆயிரம்பேர் வந்தாலும் உன்னைக் கொண்டுபோகிறேன் பார்" என்று பெட்ருஷியோவும் அவன் வேலைக்காரனுமாக கத்தரினுளை பலாத்காரமாய் கட்டி இழுத்துக் கொண்டுபோய் சேர்ந்தார்கள். பப்திஸ்தாவும் கலி

யாணத்திற்கு வந்த விருந்தினரும் இந்தக் கூத்தைப் பார்த்து பிரமித்துப்போய் வெகுநேரம் அப்படியே நின்றுவிட்டார்கள். கடைசியாய் பப்திஸ்தா விருந்தினரை நோக்கி: "அயலோரே, சிநேகிதரே, நம்முடைய விருந்திற்கு பெண்ணும் மாப்பிள்ளையும் குறைவாயிருந்தபோதிலும் பலகாரங்களுக்குக்குறைவில்லையென்று நீங்கள் அறிவீர்கள். மாப்பிள்ளைக்குப் பதிலாக லூசென்ஷியோவும் பெண்ணுக்குப்பதிலாக அவள்சகோதரி பியான்காவும் அமரட்டும்" என்றுஎல்லோரையும்அழைத்துக்கொண்டுசென்றார்.

## V

காம்பியோவென பெயர்கொண்டு பியான்காவுக்கு சம்ஸ்கிருத பாஷை கற்பிப்பதாக வேஷம் போட்டுக்கொண்டிருந்த லூசென்சியோ அவள் காதலைப் பெற்றான். பியான்காவும் மற்றவர்களைவிட இவனையே அதிகமாய் நேசித்தாள். அதைக்கண்ட மற்றக் காதலர்களும் ஒருவர் ஒருவராய் விலகிப் போனார்கள். அவள் காதலர்களில் ஒருவனான சங்கீதம் கற்பித்துவந்த (Hortensio) ஓர்டென்சியோ கோபங்கொண்டு போய், தன்னை வெகுகாலமாய் நேசித்துவந்த ஓர் விதவையைக் கலியாணம் செய்துகொண்டான்.

லூசென்ஷியோவின் வேலைக்காரனான திராணியோ பப்திஸ்தாவின் கோரிக்கைப்படி பைசா நகரத்து வின்சென்ஷியோவை எப்படி வரவழைப்பது? இவன் இவ்விடத்தில் லூசென்ஷியோ வேஷம்போட்

டுக்கொண்டிருக்க அவர் வந்தால் இவனை தன் மக னென்று அங்கிகரிப்பாரா? பப்திஸ்தாவோ தன் மகளை இவனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க அவரை அவசியம் வரவழைக்க அடிக்கடி வற்புறுத் திக்கொண்டிருந்தான். அதற்கு திராணியோ ஓர் உபாயம் செய்தான். வழிப்போக்கனாகிய அன்னி யன் ஒருவனைப் பிடித்துக்கொண்டுவந்து பைசா நக ரத்து வின்சென்ஷியோவாக நடிக்கக் கற்பித்து பப் திஸ்தாவினிடம் அழைத்துக்கொண்டுபோய் "ஐயா, பப்திஸ்தா, நான் தங்களிடம் கூறிய என் தகப்பனார் இவர்தான், தங்கள் மகள் பியான்காவை எனக்கு விவாகம் செய்வித்து எனக்கு மாமனாராய் விளங்கு மென்றான். அன்னிய ஊரானாகிய வழிப்போக்கனும் தான் எடுத்த கோலத்திற்குத் தக்கபடி திராணியோ வைப்பார்த்து: "என் மகனே பொறுமையாயிரு" என்று சொல்லிப் பிறகு பப்திஸ்தாவை நோக்கி: "ஐயா எனக்கு வரவேண்டிய சிலதொகைகளை வசூ லிக்க இப்பதுவை நகரத்திற்கு வந்தேன். வந்த விடத்தில் என் மகனாகிய லூசென்ஷியோ உங்கள் மகள்மேல் தான் கொண்ட காதலை எனக்குத் தெரி வித்தான். இது ஒரு கனமான காரியமல்லவோ? உம்மைப்பற்றி நான் கேள்விப்பட்டதிலும் என்மகன் உம்மகள்மேல் கொண்ட பெருத்த காதலைப்பற்றி யும் தகப்பனுக்குரிய கரிசனையால் தூண்டப்பட்டு அக்காதலர்களை வெகுநாளைக்கு காத்திருக்கச்செய் யாமல் அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்தருள எண்ணங்கொண்டேன். என் கருத்தைப்போல் உமக் கும் இஷ்டமானல் அவளுக்குத்தக்க ஸ்திரீதனம்

வைத்து ஓர் உடன்படிக்கை சீட்டெழுதிக்கொடுக்க நான் தயாராயிருக்கிறேன். உம்மைப்பற்றி நான் எங்கும் கேள்விப்பட்டவரையில் ஐயா பப்திஸ்தா, எனக்கு யாதொரு சந்தேகமும் கிடையாது'' என்றான். அதற்கு பப்திஸ்தா “ஐயா நான் சொல்வதில் குற்றமுண்டானால் மன்னியும். தங்களுடைய ஸ்பஷ்டமும் சுருக்கமுமான மொழிகள் எனக்குச் சந்தோஷத்தைத் தருகிறது. தங்கள் புத்திரன் என் மகளைக் காதலிப்பது வாஸ்தவம்தான். என் மகளும் அவரை வெகுவாய் நேசிக்கிறாள். நீர் அதிகம் சொல்லவேண்டியதில்லை. நீர் அவரை உம்குமாரனாகநடத்தி என் மகளுக்கு தக்க ஸ்திரீதனம் கொடுப்பீராகில் இன்றைக்கே கலியாணம் செய்துவிடலாம். என் பூரண சம்மதத்தின் பேரில் உமது மகன் என் புத்திரியை அடையலாம்'' என்று மொழிந்தான்.

எந்த இடத்தில் கலியாணம் செய்துகொள்வது என்று பப்திஸ்தாவைக் கேட்கவிரும்பி திராணியோ “அய்யா, வந்தனம், நாம் செய்துகொண்ட இவ்வுடன்படிக்கையை எவ்விடத்தில் பூர்த்திசெய்வது'' என்றான்.

அதற்கு பப்திஸ்தா, லுசென்சியோ, என் வீட்டில் வேண்டாம். குட்டிச்சுவருக்கும் காதுகள் உண்டென்று கேள்விப்பட்டதில்லையோ? எனக்கு அநேகம் வேலைக்காரர்கள் உண்டு. அதுவுமன்றி அவள் காதலர்களில் ஒருவனாகிய கிறேமியோவும் இதைக் கேள்விப்பட்டால் இதற்கு தடங்கல்செய்யக்கூடும்'' என்றான்.

திராணியோ: "தங்களுக்கிஷ்டமானல் என்வீட்டில் வைத்துக்கொள்ளுவோம். அங்கேயே என் தகப்பனாரும் தங்கியிருக்கிறார். அவ்விடத்தில் இன்றிரவே இரகசியமாய் நம் காரியங்களை முடித்துக் கொள்ளுவோம். இவ்விடமிருக்கிற உம் வேலைக்காரனை அனுப்பி உம்மகளை வரவழையும். என் வேலைக்காரன் * ஆத்துமசுத்தி செய்வோரை இவ்விடம் அழைத்துக்கொண்டு வருவான். கலியாணம் இவ்வளவு ஜல்தியில் கூடியதை முன்னிட்டு நான் தங்களுக்கு அதிக பரிசுகொடுக்கக் கூடியவனாயில்லை" என்றான்.

பப்திஸ்தா "இதுவே போதும்," என்று சொல்லி அருகில் நின்ற பாஷா உபாத்தியாயராகிய நிஜ லூசென்ஷியோவைப்பார்த்து "காம்பியோ, நீ வீட்டுக்கு ஓடி என் மகள் பியான்காவை உடனே வரச்சொல்லு. லூசென்ஷியோவுடைய தகப்பனாரும் பதுவைக்கு வந்திருப்பதாகவும் சொல்லு" என்று அனுப்பிவிட்டு திராணியோவையும் வின்சென்ஷியோவென வேஷம்போட்டு நடிக்கும் வழிப்போக்கனையும் அழைத்துக்கொண்டு லூசென்ஷியோ வீட்டிற்குப்போனான்.

---

* ஆத்துமசுத்திசெய்வோர்:—கிருஸ்துவகோவில் குருவானவர் என்பதுபொருள். ஏனென்றால் அவருக்கு தன் சபையோருடைய பாவங்களை பொறுக்கும் அதிகாரமும் உண்டு என்பது கிருஸ்துவர்கொள்கை.

இந்த விபரீதக்கூத்து எப்படிமுடியுமோவென் றெண்ணிக்கொண்டிருந்த லூசென்சியோவிடம் அவன் வேலைக்காரனை (Biondello) பியோண்டெல்லோ வந்து "ஐயா, என் மயங்கிக்கொண்டு நிற்கிறீங்க? திராணியோ உங்களை பார்த்து கண் சிமிட்டி சிரித் துப்போகலை? அதுக்கு என்ன அருத்தம் தெரிஞ் சிக்கலை.? நான் கிளவனை ஏமாத்திகினு இருக்கேன். நீங்கபோய் கண்ணாலம் கட்டிக்குங்க, இண்ணு தான். பரிசுத்த லூக்கா கோவிலுலே ஓர் கிளட்டு சாமியார் இருக்காங்க. அவுங்ககிட்ட போனாக்கா கலியாணம் ஆகுறது. ஓலைபோடலே எப்படி கலியாணம் கொடுப்பாங்க இண்ணு நினைக்கிறீங்களோ? அதெல் லாம் உத்தரவு வாங்கிபிடலாம். என்னாங்க ஐயா, முசல்கறிக்கு போட கொத்தமல்லி கீரை பரிக்க தோட்டத்துக்கு போனவ மாப்பிள்ளைகட்டிக்கினு வந்துட்டாளாம், நீங்க மயங்குறீங்க. பரிசுத்த லூக் காகோவிலுக்கு நான் முன்னே போறேன். நீங்க பொண்ணை அழைச்சிகினு வாங்க" என்று சொல் லிப்போயினான்.

தன் மகளை அழைக்கப்போன காம்பியோ இன்னும் ஏன் வரவில்லையென்று பப்திஸ்தா லூசென் ஷியோவின்வீட்டில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் போதே லூசென்ஷியோ பரிசுத்த லூக்காவின் ஆலை யத்தில் விதானச் சீட்டு பெற்று (Dispensation) பியான்காவை திருமுறைப்படி கலியாணம் செய்து கொண்டான்.

# VI

பலாத்காரமாய் தன் மனைவியை அழைத்து வந்த பெட்ருஷியோ வேணுமென்று பொறுக்கி எடுத்த ஓர் தொத்தக்குதிரைமேல் கத்தரினுளை ஏறச் செய்து தானும் தன் வேலைக்காரனும் அம்மாதிரியே ஏறிக்கொண்டு காடு மேடு பள்ளம் சேறுள்ள வழி யாய் இழுத்துக்கொண்டுபோனான். கத்தரினுள் ஏறி யிருந்த குதிரை பசி பட்டினியினால் களைத்து தன் பாரத்தைத் தாங்கமாட்டாமல் கீழே விழும்போதெல் லாம் அந்தக் குதிரையை வாயில் வந்தபடி திட்டி அடித்து தன் அருமை மனைவியை தூக்கி உனக்கு எங்கே காயம்பட்டது? எங்கேஅடிபட்டது? என்று வெகு உருக்கத்தோடு விசாரிப்பான்.

வழி முழுதும் அலுத்து வீடுபோய் சேருகிற வரையில் பெட்ருஷியோ இவ்விதமாக அலட்டி திட்டிக்கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தான். வெகு கரிசனத்தோடு கத்தரினுளை வீட்டிற்குள் அழைத்து இருவரும் சாப்பிடப்போய் உட்கார்ந்தார்கள். வேலைக்காரன் சாப்பாடுபோட்டான். கறி கொண்டு வந்து வைத்தான். வெகுநேர்த்தியாய் சமைக்கப் பட்டிருந்தது. பிரயாணத்தால் சிரமப்பட்டுவந்த கத் தரினுளுக்கும் பசி அதிகரித்தது. பெட்ருஷியோ தன்வேலைக்காரர்களைப்பார்த்து "இதையார் கொண்டு வந்தது? தீய்ந்துபோயிற்று, வேலைக்கார நாய்கள் எப்பொழுது பார்த்தாலும் கறிகளெல்லாம் தீய்த்தே போடுகிறார்கள். போக்கிரி, இப்படி தீய்ந்துபோன

கறி எனக்குப்பிடிக்காதென்று அறிந்தும் என்ன தைரியத்தோடு அடுப்பிலிருந்து இறக்கி இவ்விடம் கொண்டுவந்தாய்? உடனே எடுத்துக்கொண்டுபோ. இல்லாவிட்டால் கலத்தை எடுத்து உன் முகத்தி லெறிகிறேன் பார். உடனே கொண்டுபோகிருயா இல்லையா? திமிர்பிடித்த, மரியாதையற்ற கழுதைகளா" என்று வைது கொண்டுவந்த பதார்த்தங்களை யெல்லாம் திருப்பி எடுத்துக்கொண்டுபோகச் செய்தான்.

பசியால் வருந்திய கத்தரிஞள் "ஏன் ஐயா, கோபித்துக் கொள்ளவேண்டாம். கறி நன்ருய்த் தானிருக்கிறது. தாங்கள் திருப்திகொண்டால்' என்று தன் பேச்சை நிறுத்துகிறதற்கு முந்தியே பெட்ருஷியோ: "என்கத்தி அது தீய்ந்து வறண்டுபோய் தானிருக்கிறது. அதை கண்டிப்பாய் நீ தொடவே கூடாது. அதைத் தின்ருல் பித்தம் அதிகரித்து கோபத்தைஉண்டாக்கும். சுபாவமாகவே கோபிகளாகிய நாம்அந்தத் தீய்ந்துபோன கறியைத் தின்பதைக் காட்டிலும் பட்டினியேகிடப்பது நன்று. நாளைவரையில் பொறுமையாயிரு. நாளைக்கு கறிகள் நன்ருயிருக்கும். நானும் இவ்விரவு உன்னோடு விரதம் பிடிப்பேனென்று தேறுதல்சொல்லி பட்டினி பசியோடு கத்தரிஞளைப் படுக்கையறைக்குள் அழைத்துப் போனன். போகும்போதே பெட்ருஷியோ தனக்குள்ளே பின்வருமாறு யோசித்துக்கொண்டு சென்ருன்:—

"இவ்வித உபாயத்தோடு என் அரசாட்சியைத் துவக்கினேன். அதை அனுகூலமாகவே முடிக்கத் தீர்மானித்திருக்கிறேன். நான் பிடித்த இராஜாளி இப்போது முரட்டுத்தனமாயிருக்கிறது. அது பழகி தன் எஜமானன் குரல் அறிந்து உடனே ஓடிவர கற்றுக்கொள்ளுகிறவரையில் அதற்கு முழுத்தீனி கொடுக்கப்படாது. இன்று அவள் சாப்பிடவில்லை. அவள் சாப்பிடவும் விட்டேனு. நேற்றும் அவள் உறங்கவில்லை. இன்றிரவும் அவளைத் தூங்கவிடேன். சாப்பிடக்கொண்டு வந்த உணவுகளில் குற்றங்கள் கண்டு பிடித்ததுபோல் அவள்படுக்கையிலும்பழுதுசொல்லி தலையணையைஒருபுறம்விட்டெறிவேன், மெத்தையை மற்றொருபுறமும், துப்பட்டியை இன்னொருபுறமும் எடுத்தெறிகிறேன். இவைகளெல்லாம் அவள் மேல் வைத்த கரிசனத்தால் செய்வதாகவே காட்டிக்கொள்வேன். கடைசியாய் இன்றிரவு முழுமையும் அவளைத்தூங்கவிடேன். ஒருக்கால் கண்ணயர்ந்து அவள் தலைபாடினால் உறத்தசத்தமாய்க்கூவித்திட்டி விழிக்கச்செய்வேன். அடங்கா மனைவியை பிரியத்தால் கொல்லும் விதம் இதுதான். இவ்விதமாகவே அவள் மூர்க்கப் பிடிவாதக் குணத்தை அடக்குவேன். சண்டைக்காரியை அடக்க இதைவிட மேலான வழி வேறு யாராவதறிந்திருந்தால் சொல்லட்டும். அது நிரம்ப புண்ணியம்."

மறுநாள் காலையில் கத்தரினுள் தன் அறையில் வேலைக்காரனை குருமியோவுடன் பின் வருமாறு முறையிடலானுள். "என்னைப் பட்டினிபோட்டுக்

கொல்லவோ என்னை மணம் புரிந்தார்? என் தகப்பனார் வீட்டுக்குப்போகிற பிச்சைக்காரர்களும் ஏதோ தங்கள் பசியாற்ற பிச்சை பெறுகிறார்கள். ஒருவரைக்கெஞ்ச அறியாத நான், ஒருவரிடத்தில் கெஞ்சும்படியான வறுமையில் இராத நான், பட்டினியால் சாகிறேன். இராக்கண் விழித்த மயக்கத்தால் வருந்துகிறேன். ஆணையிட்டுத் திட்டி விழித்திருக்கச்செய்து வசைச் சொற்களால் என் பசியை ஆற்றுகிறான். இவைகளெல்லாம் என்மீது வைத்த பட்சத்திஞல் செய்வதாக காட்டிக்கொள்ளுகிறானே! அதுவே என்னைமிக்க வருத்துகிறது. நான் நன்றாய் தூங்கி சாப்பிட்டால் எனக்கு தீரா வியாதியும் மரணமும் கிட்டிவந்துவிடுமோ? எனக்குச்சாப்பிட எதாவது கொண்டுவா. எதுவாய் இருந்தாலும் சரி என் வயிறு நிரம்ப சாதந்தான் வேண்டும்" என்று பரிதாபத்தோடு கேட்டாள்.

அந்த வேலைக்காரனும் அவளைப் பரிகசித்து நிற்க அவள் புருஷனாகிய பெட்ருஷியோவே ஒரு தட்டில் கறி கொண்டுவந்து "என் கத்தி என்னமாயிருக்கிறாய்? ஏன் விசனமாயிருக்கிறாய்? சந்தோஷங் கொள். என் அன்பே உன் விஷயத்தில் நான் எவ்வளவு கவலை கொண்டிருக்கிறேன் பார். நானே இக் கறியைச் சமைத்து உனக்குக் கொண்டுவந்திருக்கிறேன்," என்று, தான் கொண்டுவந்த பீங்கான் தட்டை மேசைமேல் வைத்தான். "பிறகு என் கத்தி உனக்காக இவ்வளவு கஷ்டமெடுத்துக்கொண்ட எனக்கு ஒரு வந்தனங்கூட இல்லையா? ஒருக்கால் அது

உனக்கு பிடிக்கவில்லைபோலும். நான் பட்ட கஷ்டங்களெல்லாம் வீணாய்ப் போயிற்று. அடா? அந்தத் தட்டை எடுத்துக்கொண்டுபோ" என்றான்.

உடனே கத்தரினாள் "ஐயோ அதிருக்கட்டு" மென்று கெஞ்சினாள். அதற்கு பெட்ருஷியோ "ஓர் அற்ப ஊழியத்திற்கும் மனிதர் வந்தனமளிப்பது சகஜம். நான் உனக்குச் செய்த இவ்வரிய வேலைக்கு நீமட்டும் எனக்கு வந்தனமளிக்கக்கூடாதோ? நீ எனக்கு வந்தனமளியாமல் இதைத்தொடவேண்டாம்" என; கத்தரினாள் "ஐயா உமக்கு வந்தனம் வந்தனம்" என்று சலிப்புடன் சொன்னாள்.

பெட்ருஷியோ "என் கத்தி நீ சீக்கிரத்தில் சாப்பிடு, என் அன்பார்ந்த தேனே, நாம் உன் தகப்பனார் வீட்டிற்குப்போய் விருந்தருந்தி, பட்டாடை உடுத்தி தங்க நகை பூண்டு, முத்துத்தாவடம் வளையல்களணிந்து நம்மால் கூடிய சந்தோஷம் கொண்டாடுவோம். சாப்பிட்டாய்விட்டதா? உன் உடலை அலங்கரிக்க சுருக்கித்தைத்த உடைகளைக்கொண்டு வந்த தையற்காரன் வெளியே காத்துக்கொண்டிருக்கிறான்" என்றுசொல்லி வாய் மூடுமுன் தையற்காரனும் உள்ளேவர "எங்கே நீ தைத்த உடையைக் காட்டு" என அவன் தன் மூட்டையை அவிழ்க்குமுன் ஷாப் கடைக்காரன் ஓர் தலைச் சீராவைக் கொண்டுவந்தான். அவனைப் பெட்ருஷியோ: "நீயெங்கே வந்தா" யென, "தாங்கள் உத்தரவு செய்த தொப்பி இதோ கொண்டுவந்திருக்கிறே" னென்று ஓர் அழகிய பட்டுக்குல்லாவை கொடுத்தான்.

அதைப் பெட்ரூஷியோ கண்டு அதிர்ப்தி யடைந்தவன்போல் "சீ, சீ, இதுவென்ன கலவடை யாயிருக்கிறது, வெகு அசங்கிதமாயிருக்கிறது, நத் தைக் கூடுமாதிரியாயிருக்கிறது, இதுவென்ன கைக் குழந்தை தொப்பி, இதைக்கொண்டுபோ, இது வேண்டாம், பெரிதாகக்கொண்டுவா" வென்ருன்.

கத்தரினுவுக்கு அந்தத் தலைச்சீரா பொருந் தியதாயும் அவள் மனதிற்கேற்றதாயுமிருந்தபடி யால் அதை விட்டுவிட மனமில்லாமல் "இதற்குமேல் பெரிதாகவேண்டாம். இக்காலத்துக்கு ஒத்ததாயி ருக்கிறது. குணவதிகள் இம்மாதிரி தலைச்சீராய்தான் அணிகிருர்கள்" என்ருள்.

அதற்கு பெட்ருஷியோ "உன் குணமும் திருந்தி நீயும் குணவதியான்பிறகு ஒன்று வாங்கிக் கொள்ளலாம், இப்போது வேண்டா" மென்ருன்.

இதைக்கேட்ட கத்தரினுள் கோபங்கொண்டு "என்ன? என் மனதிற்குத்தோன்றினதைநான் ஏன் சொல்லக்கூடாது? நான் குழந்தையா? நான் கைக் குழந்தையல்ல; உனக்குமேல் குலத்திலுயர்ந்தவர் கள் என்னிஷ்டத்திற்கு காதுகொடுத்து சகித்தார் கள். உன்னல் கேட்க பிரியமில்லாவிட்டால் நீ காதை யடைத்துக்கொள். என்மனதிலுதிக்கும் கோபத்தை என் நாவு அவசியம் வெளிப்படுத்தும். அப்படிக் கில்லாமல் என் கோபத்தை அடக்க முயலுவேனகில் என் மனம் பிளந்துபோகும். அதைவிட என்

ஞல் கூடியவரையில் அபேச்சையாய் பேசுவேன்" என்று அகங்காரத்தோடு பேசினுள்.

பெட்ருஷியோ அவள் பேசியதை காதில் வாங்கிக்கொள்ளாதவன்போல் "ஆம் நீ சொல்லுவது முற்றும் நிஜமே; அது ஒரு சிறிய தலைச்சீராதான், மிளகு டப்பா, ஓர் விளையாட்டுப் பண்டம், ஓர் பட்டு சட்டி என் மனதிற்கொப்ப நீயும் அதை இகழ்வதை கண்டு எனக்கு உன்மேல் நேசம் அதிகரிக்கிறது" என்றான்.

கத்தரினுள்:—நீ என்னைநேசித்தாலும் நேசிக்கா விட்டாலும் அந்தத் தலைச் சீராய்தான் எனக்குப் பிரியம், அதுதான் எனக்கு வேண்டும். இல்லாவிட் டால் வேறொன்றும் எனக்கு வேண்டியதில்லை.

பெட்ருஷியோ:—என் மனைவிக்குப் பிரியமில் லாத தொப்பி எனக்கும் வேண்டாமென்று சொல்லி கடைக்காரனைத் துரத்திவிட்டு தையற்காரனை நோக்கி "எங்கே உன் உடையைக் காட்டு, பார்ப்போம்." என்று சொல்ல, தையற்காரன் வெகு நேர்த்தியாய் அந்தக் காலத்தில் எல்லோரும் பிரியமாய் உடுத்திக் கொள்ளும் மாதிரியாய் தைத்து வந்த ஓர்உடையைக் காட்டினுன்.

அதைத் தன் மனைவி வெகு பிரியத்தோடு நோக்குகிறதைக் கண்டு "ஐயோ, ஆண்டவனே! இது என்ன உறையடா? இதுவென்ன இதுதான்?

கையோ? பீரங்கி மாதிரியாயிருக்கிறது, பரங்கிப் பழம் பிளந்தமாதிரியாய் மேலெங்கும் பிளந்திருக்கிறது. இங்கே ஒரு கிழிசல், அங்கே ஒருவெட்டு, இங்கே ஒருதையல், அம்பட்டன் குப்பைக்குச்சமானமாயிருக்கிறது. தையற்காரா இதற்கென்ன பெயர் வைத்தாய்!” என்றான்.

அதற்குத் தையற்காரன் “ஐயா, ஒழுங்காய்க் காலத்திற்கொத்த மாதிரியாய் தைக்க உத்தரவளித்தீரே” என.

பெட்ருஷியோ “ஆம் மெய்தான், என்துணியை இப்படி தாறுமாறாய்க் கிழிக்கச் சொன்னேனா? என்னை நீ வீடுவீடாய் சென்று திட்டினாலும், நான் எடுத்துக்கொள்ளமாட்டேன். இது எனக்கு வேண்டாம். இதை நீ என்னவேண்டுமோ செய்துகொள்ளலாம் என்று தையற்காரன் மேலெறிந்தான்.

கத்தரினாள்:—இவ்வளவழகான உடை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. இதைப்போல் விசித்திரமாயும்,ரம்மியமாயும் அனுமானிக்கப்படும்உடை நான் கண்டதேயில்லை. என்னை ஒரு பொம்மையாக்கப் பார்க்கிறீர்களா?

பெட்ருஷியோ:—ஆம் என் கண்ணே, உன்னைப் பொம்மையாக்கத்தான் இவ்வுடையைத் தைத்துக் கொண்டு வந்திருக்கிறான்.

தையற்காரன்:—ஐயா, அவர்களை நீர்பொம்மையாக்குகிறதாகவன்றோ அம்மா சொல்லுகிறார்கள்.

4

பெட்ருஷியோ "என்ன பிர்மாண்ட போக்கிரித்தனம்! நீ சொல்லுகிறது சுத்தப்பொய். அடா நூலே! ஊசியே! அங்குலித்திரணமே! முழக்கோலே! முக்கால்முழம்! அரைமுழம்! கால்முழம்! ஈயே! எறும்பே! ஒரு கண்டு நூலோடு என் வீட்டிலேயே என்னை எதிர்க்க வந்தாயா? அடா கந்தல் ஓடிப்போ, இனி உன் ஜீவிய நாள் வரையில் வாய் திறக்கவொட்டாமல் உன் முழக்கோலாலேயே அடிப்பேன். என் மனைவியின் உடையைச் சின்னபின்னமாகக் கிழித்தவன் நீ என்று நானே சொல்லுகிறேன்" என்று தையற்காரனை வச;

தையற்காரன்:—பிரபு, தாங்கள் கோபிக்க வேண்டாம். தங்களுடைய உத்தரவின்படி தாங்கள் தைக்கச்சொன்ன மாதிரியாகவே தைத்திருக்கிறேன். தங்களுடைய வேலைக்காரனாகிய குருமியோதான் அதுதைக்கப்படவேண்டிய மாதிரிகொடுத்தான்.

குருமியோ:—நான் மாதிரியா கொடுத்தேன்? துணிதான் கொடுத்தேன்.

தையற்காரன்:—அது எவ்விதம் தைக்கப்பட வேண்டுமென்று சொன்னாய்?

குருமியோ:—என் ஊசியும் நூலாலுந்தான்.

தையற்காரன்:—அதை நீ வெட்டச் சொல்லவில்லையா?

குருமியோ:—எதிர்த்துப்பேசாதே. உன் எஜமானிடம் துணியைக்கொடுத்து ஒரு உடை வெட்டி தைக்கச் சொன்னேனே தவிர இப்படி துண்டு துண்டாய்க்கிழிக்கச்சொல்லவில்லை, நீ பொய்பேசுகிறாய்.

தையற்காரன்:—நான் பொய் சொன்னாலும், உன் குறிப்புச்சீட்டு இதோ இருக்கிறது.

பெட்ருஷியோ:—எங்கே, வாசி பார்ப்போம்.

தையற்காரன்:—முதல் முதல்: உடம்பில் இறுகப்பிடிக்காத தளர்ச்சியான அங்கி.

குருமியோ:— ஐயா, தளர்ச்சியான அங்கியென்று சொல்லியிருந்தேனேயாகில் அந்த அங்கியிலே என்னையும் தைத்து அந்தக் கறுப்பு நூலின் தண்டினால் நான் சாகும்வரையிலடியும். நான் அங்கியென்றுதான் சொன்னேன்.

பெட்ருஷியோ:—அதற்கு மேல் வாசி.

தையற்காரன்:—குறுகிய இடுப்பு.

குருமியோ:—இடுப்பு சொன்னேன்.

தையற்காரன்:—கட்டையான கை.

குருமியோ:—இரண்டு கை சொன்னேன்.

தையற்காரன்:—விசித்திரமாய் வெட்டிய கை.

பெட்ருஷியோ:-அங்கேதான் போக்கிரித்தன மிருக்கிறது.

குருமியோ:—சீட்டிலே தவரு இருக்கிறது; சீட்டிலே தவரு இருக்கிறது. கையை வெட்டி மறு படியும் தைத்துவிடச் சொன்னேன்; என்னடா பொய்பேசுகிறாய். இரு உனக்குக் காட்டுகிறேன்.

தையற்காரன்:—நீ சொல்லுகிறது வாஸ்தவந் தான். நீ இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் அப்பொழுது சொல்வேன்.

குருமியோ:-இப்பொழுதேவாடா, உன்சீட்டை நீ எடுத்துக்கொள். முழக்கோலை என் கையில் கொடு. ஒரு கை பார்க்கிறேன்.

பெட்ருஷியோ:—அடே, கடைசியாய் இந்த அங்கி எனக்கல்ல.

குருமியோ:— ஆம் ஐயா, நீங்கள் சொல்வது சரி, அந்த அங்கி உங்களுக்கல்ல, உங்களுடையமனை விக்காக.

பெட்ருஷியோ:— இதை எடுத்துக்கொண்டு போய் இதைத் தைத்த உன் எஜமானனைப் போட் டுக்கொள்ளச்சொல், போ.

குருமியோ:— அடே துஷ்டா தொடாதே. என் எஜமானி அங்கியை உன் எஜமானன் அணி வதா?

பெட்ருஷியா:— ஏண்டா! தடுக்கிறாய் உன் கருத்தென்ன?

குருமியோ:— ஐயா, என் கருத்து நீங்கள் நினைக்கிறதற்கு மேல் வெகு ஆழமாய்ப் போகிறது. என்எஜமானி அங்கியை எடுத்துப்போய் அவன் எஜமானன் அணிந்துக்கொள்வதா? சீ, சீ.

தன் மனைவிக்கு அவளிஷ்டப்படி உடைகள் ஒன்றும் வாங்கிக்கொடுக்கக்கூடாதென்று கருத்துக் கொண்ட பெட்ருஷியோ தையற்காரனையும் தன் மனைவி எதிரே வைது வெரட்டினாலும் இரஹசியத்தால் அவனுக்கு நல்ல வார்த்தைச் சொல்லி அவன் தைத்த உடுப்புகளுக்குக் கூலி கொடுத்து அனுப்ப ஓர் வேலைக்காரனிடம் சொல்லியனுப்பினான். தையற்காரன் போனபிறகு தன் மனைவியைப் பார்த்துப் பெட்ருஷியோ "என் கத்தி, இந்தத் தாழ்ந்த உடைகளோடு உன் தகப்பனார் வீடு போவோம் வா. உடைகள் ஏழ்மையாயிருந்தாலென்ன? காசு மீதிதானே. மனதுதான் ஒருவனைத் திருப்திபண்ணி வைக்கிறது. அடர்ந்த மேகங்களிலிருந்து சூரியன் புறப்படுகிறது போல தாழ்ந்தஉடைகளிலிருந்தும் நம்முடைய கண்ணியம் விளங்கும். அழகிய இறகுகளைக் கொண்டிருத்தலால் புள்ளிச் சிட்டு, வானம்பாடியைவிட பெருமை வாய்ந்ததோ? நமது பார்வைக்கு ரம்மியமாகத் தோன்றும் சட்டையைக்கொண்டிருத்தலால் விரியன்பாம்பு விலாங்கு மீனை விட நல்லதோ? என் கத்தி ஒருக்காலுமில்லை. இந்தத் தாழ்மையான

உடைகளினாலும், பூஷணாங்களினாலும் நீ கெட்டுப் போகமாட்டாய். இவைகளைத்தரித்திருப்பதுஉனக்கு அவமானமாயிருந்தால் அவைகளைக் கழற்றி என்மே லெறிந்துவிடு. நாம் விருந்தருந்தி சந்தோஷம் கொண்டாட உன் தகப்பனார் வீட்டிற்கு உடனே போவோம். என் வேலைக்காரர்களைப்போய் கூப் பிட்டுவா. நாம் உடனே போவோம். நம் குதிரை களைப் பெரிய தெரு முனையில் கொண்டுபோய் வைத் திருக்கச் சொல். அது வரையிலும் நடந்துபோய் அங்கே குதிரைமேல் ஏறிக்கொள்ளுவோம். இப் போது என்ன மணி? இப்போது தான் ஏழு அடித் திருக்கிறது. மத்தியான போஜனத்துக்கு அவ் விடம் போய்ச் சேருவோம்" என்றான். அப்போது மத்தியானப் பொழுதிற்குமேல் மணி இரண்டா யிருந்தது. தன் கணவன் தவறுதலாய்ச் சொன்ன தாக நினைத்துக் கத்தரீனாள் "இப்போது மணி இரண்டாய்விட்டது, இராப்போஜனத்திற்குத்தான் போய்ச் சேருவோம்" என்றாள்.

ஆனால் பெட்ருஷியோ, அவளை அவள் தகப் பன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகிறதற்கு முன் அவள் கர்வத்தை அடக்கித் தனக்கு முற்றி லும் கீழ்ப்படியும்படி வைக்க வேண்டுமென்று கருத்துக்கொண்டு தான் பிடித்த பிடிவாதத்தை விடாமல் "இப்போது மணி ஏழுதான். நான் எது சொல்லுகிறேனோ அல்லது செய்கிறேனோ அல்லது செய்ய நினைக்கிறேனோ எல்லாவற்றிற்கும் நீ தடுத் துச் சொல்லுகிறாய் யார். அடே ஒன்றும் செய்ய

வேண்டாம், நான் இன்றுபோகவில்லை. நான்சொல்லு கிறது சரிஎன்றால்தான் போவேன்" என்று சொல்லி அன்று பயணத்தை நிறுத்திவிட்டான். மறுநாள் கத்தரினாளை மற்றொரு காரியத்திலும் கீழ்ப்படியும்படி செய்து தடுத்துச்சொல்லுதல் இன்னதென்பதே தெரியாமல் அவள் கர்வமுற்றிலும் அடக்கி அவள் புருஷன் சொற்களுக்கு முற்றிலும் கீழ்ப்படியக் கற்றுக்கொண்ட பிறகுதான் அவள் தகப்பன் வீட்டுக்கு அழைத்துப்போக பெட்ருஷியோ சம்மதித்தான்.

# VII

கத்தரினாளை அவள் தகப்பன் வீட்டிற்கு அழைத்துப்போகும் வழியில்கூட அநேகந் தடவைகளில் பெட்ருஷியோ தன் வீட்டிற்குத் திருப்பிக் கொண்டு போவதாய் பயமுறுத்தி முற்றிலும் கீழ்ப்படிதலுள்ளவளாய் ஆக்கினான்.

கத்தரினாளை, இன்னும் சோதிக்கும்பொருட்டு நடு மத்தியான வெய்யிலில் பெட்ருஷியோ "வா இப்போது உன் தகப்பன் வீட்டுக்குப் போவோம். ஆண்டவனே எவ்வளவழகாய் இப்போது சந்திரன் பிரகாசிக்கிறான்" என்றான்.

"என்ன சந்திரனா? இது சந்திர வெளிச்சமா? சூரியனன்றோ இப்போது எரிக்கிறான்" என்றாள் கத்தரினாள்.

பெட்ருஷியோ "இப்போது அழகாய் பிரகாசிப்பது சந்திரன் தான்" என்று பிடிவாதமாகச் சொன்னான்.

கத்தரினாள் "என்னை ஏமாற்றவேண்டாம், இப்போது எரிப்பது சூரியன்தா" னென்று கூறினாள்.

பெட்ருஷியோ "இல்லை அது சந்திரன்தான், அல்லது நட்சத்திரம் அல்லது எனக்கெது இஷ்டமோ அது அப்போதுதான் உன் தகப்பனார் வீட்டுக்குப்போவேன். குதிரையைத் திருப்படா எப்போது பார்த்தாலும் இந்த ஆட்சேபனையா? ஓயாத ஆட்சேபனை" என்று ஆர்ப்பரித்தான்.

கத்தரினாள் பயந்து "இல்லை இல்லை எதிர் நடந்துச் செல்லுங்கள். தங்களிஷ்டப்படி சந்திரனாவது, சூரியனாவது, உங்களுக்கிஷ்டமிருந்தால் மெழுகுவர்த்திவெளிச்சமென்றாவது வைத்துக் கொள்ளுங்கள். இனி தங்களிஷ்டப்படியே நானும் கூறுவே" னென்றாள்.

பெட்ருஷியோ "அது சந்திரன் தான்" என்று பிடிவாதம் செய்தான்.

கத்தரினாளும் "ஆம் அது சந்திரன் தான்" என்றாள்.

பெட்ருஷியோ "நீ சொல்லுகிறது பொய் அது சூரியன்" என்றான்.

கத்தரினும் “ ஆண்டவனே ! அது சூரியன் தான். தாங்கள் அது சூரியன் அல்லவென்றால் அது சூரியனல்ல. தங்களுக்கிஷ்டம் போல் அது சந்திரனாக மாறட்டும். அதற்கென்ன பெயரிட்டு அழைக்கச் சித்தமோ அப்படியே கத்தரினுக்கும் இருக்கட்டும்” என்று முற்றிலும் வணங்கி மொழிந்தாள்.

“ அப்படியானால் சரி, உன் தகப்பன் வீட்டை நோக்கிச் செல்வோம்” என்று தன் மனைவியை அழைத்துக்கொண்டு கொஞ்சதூரம் சென்று இன்னும் அவளைச் சோதிக்கக்கருதி அவ்வழியாய் வந்து கொண்டிருந்த ஓர் கிழவனைப்பார்த்து “ சாந்த குண அம்மணி, உனக்கு வந்தனம்” என்று உபசரித்துத் தன் மனைவியைப்பார்த்து: “ என் இனிய கத்தி இவ்வளவழகான குணவதியை நீ எப்போதாவது பார்த்ததுண்டா ? அவளுடைய கன்னங்களில் வெளுப்பும், சிகப்பும் சண்டை செய்வனபோல் அவள் முகம் ரோஜாமலரை ஒத்திருக்கின்றன. அத்தெய்வீக முகத்தில் ஜொலிக்கும் அவள் இரு கண்களைப் போல வானமண்டலத்திலும் நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றனவா ? சுந்தரப் பெண்ணே, உனக்கின்னொரு கும்பிடு. என் அன்பார்ந்த கத்தி, அவள் அழகுக்கு நமஸ்காரமாக அவளைக் கட்டிக்கொள்” என்றான்.

கன்னங்கள் சுருங்கி கூனி நடக்கும் ஓர் கிழவனை ஒரு சுந்தரமாதாக எந்தப் பயித்தியக்காரன்

தான் ஒத்துக்கொள்ளுவான்? இருந்தபோதிலும் தன் கணவன் சொல்லைத் தடுத்துக்கூறுவதினாலுண்டாகும் கஷ்டத்தை அறிந்த கத்தரினாள் தன் கணவனிஷ்டத்திற்கமைந்து உடனே ஓடி அக்கிழவனைக் கட்டிக்கொண்டு "புதிதாய் முளைத்தெழும் இளங்குமரி, அழகினவதாரமே, இனியாளே நீ எங்கே போகிறாய்? நீ வாசம் செய்யும் இடம் யாது? இவ்வளவழகு வாய்ந்த குழந்தையை பெற்றவர்கள் என்ன பாக்கியசாலிகள்! இவளை மணம்புரிய பாக்கியம்பெற்றமனிதனுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்ட" மென்று கூறினாள்.

தன் மனைவியின் கெர்வ முற்றிலும் ஒழிந்து அவள் சாதுவாக்கப்பட்டதை அறிந்த பெட்ருஷியோ: "கத்தி! உனக்கென்ன பயித்தியமா? தோல் சுருங்கி முகம் மங்கிய ஓர் கிழவனன்றோ இவன். நீ கூறியதுபோல இளம் பெண்ணல்லவே" என்றான். அதற்கும் கத்தரினாள் வாதாடாமல் "வயது சென்ற என் ஐயா, வெய்யல் என் கண்களைக் கூசியதால் எனக்கு எல்லாம் பச்சையாய்த் தெரிகிறது. இப்போதுதான் சங்கைக்குரிய தகப்பனாரென்றுணருகிறேன். பயித்தியக்காரத்தனத்தினால் நான் செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளு" மென்றாள்.

பெட்ருஷியோவும் "தாத்தா, தாங்கள் எங்கே போகிறீர்கள். நாங்கள் போகும் வழியே நீங்களும் வருவீரானால் சந்தோஷத்தோடு உம்மோடு

வருமேவா"மென்ருன். அவ்வழியே வந்த கிழவன் பைசாநகரத்து பிரபுவும், பப்திஸ்தாவின் இளைய மகளாகிய (Bianca) பியான்காவை கலியாணஞ் செய்துகொண்ட (Lucentio) லுசென்ஷியோவின் தகப்பனுமாகிய வின்சென்ஷியோவே. பதுவை நகர் சர்வ கலாசாலைக்கு அனுப்பியிருந்த தன் மகனுகிய லுசென்ஷியோவைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தார். பதுவை நகர் பப்திஸ்தாவின் வீட்டில் நடந்தேறும் விஷயங்கள் யாதொன்றும் இவருக்குத் தெரியாது. தான் வரும் வழியில் ஓர் வாலிபன் தன்னை இளமாதென்று கூறி வந்தனுபசாரம் செய்ததையும், அவனருகில் வந்த ஓர் சுந்தரி அவன் சொற்களுக்கிணங்கி தன்னைக் கட்டி முத்தமிட்டதையும், பிறகு உடனே தங்கள் தப்பிதத்தை உணர்ந்தவர்கள்போல தன் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டதையும் கண்ட வின்சென்ஷியோ இவைகளெல்லாம் சிறுவர்களின் விளையாட்டென்று கண்டு இவர்களை நோக்கி "என் சுந்தர ஐயா, உல்லாச குண நங்காய், உங்களுடைய அபூர்வவிளையாட்டு எனக்குஆச்சரியத்தைத் தந்தது. என் பெயர் வின்சென்ஷியோர். நானிருப்பது பைசா நகரம். வெகு நாளாய்ப் பாராத என் மகனைப் பார்க்க இப்போது பதுவை நகரம் போகிறேன்" என்ருர்.

பெட்ருஷியோ "உமது குமாரன் பெயர்யாது?" என்று வினவ.

வின்சென்ஷியோ:—"சாந்தகுண ஐயா, என்

மகன் பெயர் லூசென்ஷியோ" என்றான். "அப்படியானால் நாம் நன்றாய் ஒன்று சேர்ந்தோம். உம் மகனுக்காக அதிக சந்தோஷப்படுகிறோம். இப்போது சட்டப்படியும், சங்கைக்குரிய வயதைப் பற்றியும் நாங்கள் உம்மை எங்களன்புள்ள தகப்பனென்றழைக்க பாத்தியமுள்ளவர்களாயிருக்கிறோம். இக்குணவதியாகிய என் மனைவியின் சகோதரியை உமது மகன் கலியாணஞ் செய்துகொண்டிருப்பான். நீங்கள் ஆச்சரியப்படவும் வேண்டாம், விசனப்படவும் வேண்டாம். அவள் நற்புகழுடையாள், அவள் ஸ்திரீதனமோ பெருத்தது, அவள் பிறப்போ உயர்வுடையது; எந்த நற்குலப் பிரபுவுக்கும் ஏற்ற மனைவியாகத்தக்க குணமுடையாள். வயதில் முதிர்ந்த வின்சென்ஷியோ, உம்மை ஆலிங்கனம் செய்கிறேன். உம்மைக் காணக் குதிக்கும் உம் மகனைப் பார்க்க நாமிருவரும் போவோம்" என்றுரைக்க,

வின்சென்ஷியோ "நீங்கள் சொல்வதென்ன உண்மையோ? அல்லது வழிப்போக்கர் தங்கள் வழியில் சந்திக்கும் பிரயாணிகளிடம் கூறும் பரிகாச வார்த்தைகளோ?" என்ன.

பெட்ருஷியோ "வாருங்கள் நீங்களே வந்து உண்மையைத் தெரிந்துக் கொள்ளுங்கள். எங்களுடைய முதல் விளையாட்டுத் தங்களை சமுசயிக்கச் செய்கிறது" என்று வின்சென்ஷியோவையும் தன்னுடன் கூட்டிச்சென்றான்.

# VIII

பியான்காவின் மற்ற காதலர்கள் எங்கே கலகம் பண்ணுவார்களோவென்று பயந்து பதுவை நகரத்தில் லுசென்ஷியோவின்வீட்டில் இரகசியமாய் தான் லுசென்ஷியோவென்று எண்ணிக்கொண்டிருக்கும் திராணியோவுக்குத் தன் மகளைக்கலியாணஞ்செய்து கொடுக்க அவ்விடம் ஆயத்தம் செய்துகொண்டிருந்த பப்திஸ்தா தன் மகளை அழைக்கப்போன காம்பியோ இன்னம் வாராததின் காரணம்என்னவோவென்று ஆலோசித்துக்கொண்டிருக்க, இதைஅறிந்த மற்றொருவரு காதலனாகிய கிறெமியோ தானிருக்க எப்படி அவள் அந்த லுசென்சியோவை மணம் புரிவாள் பார்ப்போமென்று வீட்டின் வாசற்படியிலேயே பெண்ணை அழைத்துவரும் காம்பியோவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். காம்பியோ இன்னும் வாராதிருப்பது என்ன ஆச்சரியமாயிருக்கிறது என்று சொல்லி வாய் மூடுமுன் பெட்ருஷியோ, கத்தரினாள், வின்சென்ஷியோ இம்மூவரும் அந்த வீட்டின் முகப்பில் வந்து சேர்ந்தார்கள்.

பெட்ருஷியோ, வின்சென்ஷியோவைப்பார்த்து "ஐயா இதுதான் லுசென்ஷியோவின் வீடு, என் மாமனாரின் வீடு, இவ்வூர் கடைத்தெரு மார்க்கமாயிருக்கிறது. தங்களை இவ்விடம் விட்டு நாங்கள் அங்கே போகிறோம்" என்று சொல்ல, "இவ்விடம் நாம் பானமருந்திச் சந்தோஷங் கொண்டாடாமுன் நீர் போவது சரியல்ல, உமக்கும் நல்வரவு கூற என்

மகனிடம் கற்பிப்பேன்." இவ்விடத்தில் ஏதோ சந்தோஷம் கூத்தாடுகிறது என்று சொல்லி வின்சென்சியோ கதவைத் தட்டினான். வாசலில் காத்துக்கொண்டிருந்த கிறேமியோ: "ஐயா உள்ளே அதிக வேலையாயிருக்கிறதாகக் காண்கிறது. இன்னும் பலமாய்த்தட்டு" மென்றான்.

வெளியில் கதவைத் தட்டுகிற சத்தம் கேள்விப்பட்டு உள்ளே யிருந்த வின்சென்ஷியோவாக வேஷம் போட்டுக்கொண்டிருந்த வழிப்போக்கன் மாடி ஜன்னலைத் திறந்துக்கொண்டு தன் தலையை நீட்டி "யார் அங்கே? கதவைக்கீழே தள்ளி விடுகிறாப்போல் இடிக்கிறவன்" என, வெளியிலிருந்து நிஜ வின்சென்ஷியோ "லுசென்ஷியோ வென்பவர் உள்ளே இருக்கிறாரா" என்று வினவினார்.

வழிப்போக்கன் "ஆம் உள்ளே இருக்கிறார், இப்போது பேசமாட்டார்" என்றான்.

வின்செென்ஷியோ "என்ன அவரைக்களிப்பிக்க நூறு, இருநூறுபவுன் கொண்டுவந்தாலுமா?" என, வழிப்போக்கன் "உன் நூறு பவுனை நீயே வைத்துக்கொள். நான் உயிருள்ளவரையில் அவனுக்கு ஒன்றுந் தேவையில்லை?" என்றான். இதைக்கேட்ட பெட்ருஷியோ: "உம் மகன் பதுவையில் எல்லோராலும் நேசிக்கப்படுகிறானென்று நான் முன்னமே கூறினேனே. நீரே இப்போது கேட்டீரன்றோ" என்று வின்சென்ஷியோவிடம்கூறி மாடியிலிருக்கும்

வழிப்போக்கனைப் பார்த்து: "வீண் வார்த்தை யின்றி பைசா நகரமிருந்து அவர் தகப்பனார் வந்து அவருடன் பேச வாயிலண்டை காத்திருப்பதாக னுசென்ஷியோவிடம் சொல்லு" மென்றான்.

வழிப்போக்கன் "நீ பொய் மொழி கூறுகின்றாய். பைசா நகரமிருந்து வந்திருக்கும் அவர் தகப்பனார் மாடி ஜன்னல் வழியாய் எட்டிப் பார்க்கிறது உனக்குத் தெரியவில்லையோ?" என்றான்,

வின்சென்ஷியோ 'நீர்தான் அவர் தப்பனாரோ?' என்று வினவ,

வழிப்போக்கன் "அப்படித்தான் அவன் தாய் கூறுகிறாள்" என்றான்.

இதைக்கேட்டபெட்ருஷியோவும் கூடவந்தவர் மேல் சந்தேகங்கொண்டு நிஜவின்சென்ஷியோவைப் பார்த்து: "ஏனையா, இக்கிழ வயதில் உமக்கிந்தப் போக்கிரித்தனம்? இன்னொருவர் பெயரைத் தரிக்க என்ன தைரியம் உமக்கு?" என்றான். மாடி ஜன்னல் வழியாய்க் காணப்படும் வழிப்போக்கன்: "அந்தப் போக்கிலியை உதையுங்கள், என் பெயரை வகித்து அவன் யாரையோ ஏமாற்ற எண்ணியிருக்கிறான்" என்றான்.

காம்பியோவென மறு நாமம் பூண்ட தன் எஜமானனாகிய நிஜ லூசென்ஷியோ பியான்காவை மணம்

புரிய வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்துவிட்டு இவ்விடம் வந்துகொண்டிருந்த பியோன்டெல்லோ வென்னும் வேலைக்காரனை வின்சென்ஷியோ பிரபு கண்டு: அடே போக்கிலி, இங்கே வா; என்னை மறந்தனையோ? என,

பியோன்டெல்லோ "உங்களையா! நானெப்படி மறக்கிறது. நான்உங்களை பார்த்ததேயில்லை" என்று தன் ஏஜமானனை அறியாதவன்போல நடித்தான்.

தன் வேலைக்காரனும் தன்னை அங்கீகரியாததைக்கண்டு வின்சென்ஷியோ:—அடே கஜப்போக்கிரி உன் எஜமானனாகிய வின்சென்ஷியோவைப் பார்த்ததில்லையா?" என்றுகேட்க.

பியான்டெல்லோ:—"எங்கய்யாவையா? அதோ சன்னலிலே எட்டிப் பாக்கிராங்களே அவுங்கள் தான் எனக்குஎஜமாங்க"வென, தன்னை மறுதலித்து வேறொருவனைத் தன் எஜமானனெனக் கூறிய தன் வேலைக்காரன்மேல் கோபங்கொண்டு அவனை அடிக்க அவன் ஐயோ ஐயோ என்னை யாரோ ஒரு பயித்தியக்காரன் கொல்லுகிறானே" என்று கதறினான் "அப்பா மகனே, ஐயா பப்திஸ்தா, வாருங்கள் வாருங்களென்று" வழிப்போக்கனும் கூப்பிட்டுக் கொண்டு ஓடிவர மாடிமேலிருந்து லுசென்சியோ வென வேஷம் போட்டுக்கொண்டிருக்கும் திரானியோவும் பப்திஸ்தாவும் வாசற்படியண்டை ஓடிவந்தார்கள்.

வின்சென்ஷியோ பிரபுவுடன் கூடவந்த பெட்ருஷியோவும், கத்தரினளும் இந்த வேடிக்கையைப் பார்க்க ஒதுங்கி நின்றார்கள்.

"என் வேலைக்காரனை அடிக்க நீர் யார்?" என்று மாப்பிள்ளை கோலங்கொண்டு பட்டாடை உடுத்திக்கொண்டிருக்கும் திராணியோ கேட்க வின்சென்ஷியோ "நான் யாரா? நீ யாரடா? அடா நீ ஒரு பெரிய போக்கிலி. உனக்குப் பட்டு கோட்டும், பட்டு கால் நிஜாரும், சிகப்பு பீதாம்பரமும், சரிகை தொப்பியும் வேண்டுமோ? ஐயோ தொலைந்தேனே, நான் என் மனைவியுடன் ஒன்றுமறியாமல் வீட்டிலிருக்க என் மகனும் என் வேலைக்காரர்களும் சர்வகலாசாலையில் இப்படி வீண் செலவு செய்கிறார்கள்" என்றான்.

திராணியோ "என்ன? உமக்கென்ன பயித்தியமா? நீர்சொல்லுகிறது ஒன்றும் விளங்கவில்லையே" என, "இவனுக்குப் பயித்தியந்தான்?" என்று பப்திஸ்தா கூறினன்.

திராணியோ "ஐயா உம்மைப்பார்த்தால் வயது சென்ற ஓர் பெரிய மனுஷன்போலிருக்கிறது. ஆனல் நீர் பைத்தியக்காரனைப்போல் பேசுகிறீர். நான் முத்துத்தாவடமும், வயிரமும் பூண்டால் உமக்கென்ன? இவைகளையெல்லாம் சம்பாதித்தருளிய உனக்கு என் வந்தனம் அப்பா" என்று வழிப்போக்கனைப் பார்த்துக் கூற, வின்சென்ஷியோ "இவர் உன் தகப்பனு? அடா போக்கிலி, பெர்காமில் செருப்புத் தைப்பவனல்லோ உன் தகப்பன்" என்றார்.

பத்திஸ்தா "ஐயா நீர் தவறுதலாய்ப் பேசுகிறீர். தவறிப்பேசுகிறீர். அவர் யாரென்று நினைக்கிறீர், அவர் பெயர் தெரியுமா?" என்று கேட்க, வின்சென்சியோ "அவன் பெயரா? மூன்று வயதுப் பிள்ளையாயிருக்கும்போது முதல் வளர்த்த எனக்கா அவன் பெயர் தெரியாது? அவன் பெயர் திராணியோ எனக்குத் தெரியாதா? என்றார்.

வழிப்போக்கன் உடனே "அடா போடா பயித்தியங்கொண்ட கழுதை; அவன் பெயர் லூசென்ஷியோ வன்றோ? வின்சென்ஷியோவாகிய எனக்கு அவன் ஏக புத்திரனும் என் ஆஸ்திக்கு ஏகசுதந்தரவாளனுமானவன்" என்றான்.

இதைக்கேட்ட வின்சென்ஷியோ எங்கே தன் வேலைக்காரன் தன் எஜமானனாகிய தன் மகனைக் கொன்று அவன் பெயரை வகித்துக்கொண்டானோ என்று திடுக்கிட்டுப்பயந்து: அடா மகனே லூசென்ஷியோ! ஐயோ இப்பாவி தன் எஜமானனைக் கொன்றான் போலும். அவன் குற்றவாளிதான். அரசனின் நாமத்தால் அவனைச் சிறைப்படுத்துங்கள். ஐயோ, என் மகனே, மகனே, அடா துரோகி என் மகன் லூசென்ஷியோ எங்கே?" என்று பதற, திராணியோ ஓர் சேவகனைக் கூப்பிட்டு: "அடா சேவகா, இவனை சிறைச்சாலைக்குக் கொண்டுபோ. மாமா பத்திஸ்தா இவனைக் கொண்டுபோகச் செய்யுங்கள்" என்றான்.

வின்சென்ஷியோவும் "என்னையா சிறைச்சாலைக்குக்கொண்டுபோகச்சொன்னாய்?" என்று கேட்க

பக்கத்தில் நின்ற கிறேமியோ: சேவகா, நில், அவரைச் சிறைச்சாலைக்கு கொண்டுபோக வேண்டாம் என்று தடுத்தான். "தடுக்காதே கிறேமியோ அவன் ஜெயிலுக்குப் போகட்டும்" என்றார் பப்திஸ்தா.

கிறேமியோ "ஐயா, பப்திஸ்தா, இந்த விஷயத்தில் நீர் ஏமாந்துபோகாதபடி எச்சரிக்கையாயிரும். இவர்தான் நிஜ லூசென்ஷியோவென உறுதிமொழி கூறுவேன்" என, வழிப்போக்கன் "எங்கே சத்தியம் பண்ணு பார்ப்போம்?" என்றான்.

"நான் சத்தியம் செய்யமாட்டேன்," என்று கிறேமியோ கூற, திராணியோ "அப்படியானால் நான் லூசென்ஷியோ வல்லவோ?" என்றான்.

நிஜ லூசென்ஷியோவை காம்பியோவென்றும், இவனை லூசென்ஷியோ வென்றும் நம்பி இருந்த கிறேமியோ "நீ லூசென்ஷியோதான், நானறிவேன்" என்றான்.

"அந்தக் கிழவனைச் சிறைச்சாலைக்குக் கொண்டு போங்கள்" என்று பப்திஸ்தா சேவகர்களுக்குக் கட்டளையிட, வின்சென்ஷியோ "இதென்ன அநியாயம். அன்னியர்களானால் இப்படி அவமானம் செய்யலாமோ? ஓ துரோகி!" என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கும்போது நிஜ லூசென்ஷியோவும், பியான்காவும் இவர்கள் வேலைக்காரனை பியோன்டெல்லோவும் வந்தார்கள். பியோன்டெல்லோ "ஐயா மோசம்

போனுமே அவரை உம் தகப்பனென்று ஏத்துக் கொள்ளவேண்டாம், கொண்ணுடுவார்" என்ருன்.

ஆனல் லுசென்ஷியோ தன் தகப்பனர் காலில் விழுந்து "எனதருமைத் தகப்பனே என்னை மன்னியு" மென்று வேண்டிக்கொண்டான். பியான் காவும் தன் தகப்பனகிய பப்திஸ்தாவின் காலில் விழுந்து தன்னைமன்னிக்கும்படி பிரார்த்தித்தாள். பப்திஸ்தாவுக்கு ஒன்றும் தோன்ருமல் "மகளே உன்னை மன்னிக்க விரும்பும் நீ என்ன குற்றம் செய்தாய். லுசென்ஷியோ எங்கே"? என்ருன்.

அதற்கு லுசென்ஷியோ முன்வந்து: "என் வேலைக்காரனை பொய் லுசென்ஷியோ உம் கண்ணில் மண்போட்டுக்கொண்டிருக்க உம் மகளை மெய் விவாஹத்தால் எனக்குச் சொந்தமாக்கிக்கொண்ட வின்சென்ஷியோவின் குமாரனை நிஜ லுசென்ஷியோ இதோவிருக்கிறேன்" என்ருன்.

"எனக்கெதிரே என்னோடு இவ்விஷயத்தில் எதிர்வாதமாடின அந்தப் போக்கிலி திராணியோ எங்கே?" என வின்சென்ஷியோ குதித்தான்.

பப்திஸ்தா "என்ன என் மகளே, இவன் காம்பியோவல்லவோ?" என, பியான்காள் "ஆம் காம்பியோதான் லுசென்ஷியோவாக மாறினர் என்ருள்.

லுசென்ஷியோ "நேசம் இப்புதுமையைச் செய்தது. பியான்காவின் நேசம் என்னை என்

வேலைக்காரனை திராணியோவுடன் உடைமாற்றிக் கொள்ளவும் அவன் எனக்குப் பதிலாக இப்பட்டணத்தில் என் பெயரை வகித்துக்கொள்ளவும் செய்தது. நானும் ஆசித்த என் ஆனந்த பாக்கியத்தை அடைந்தேன். திராணியோ அவ்விதமாக நடந்ததுவும் என் கட்டளைப்படியே ஆகையால் என் அப்பா எனக்காக அவனைப் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

வின்சென்ஷியோ "என்னை ஜெயிலுக்கு அனுப்புவதாய்ச் சொன்ன அந்தத் துஷ்டன் மூக்கை உடைக்காமல் போகிறேனா பார்" என்றான்.

பப்திஸ்தா லுசென்ஷியோவைப் பார்த்து "என்னிஷ்டத்தைக்கேளாமல் நீர் எப்படி என்மகளை மணப்பீர்" என்றான்.

அதற்கு வின்சென்ஷியோ "ஐயா பப்திஸ்தா நீர் பயப்படவேண்டாம்; உமக்கு அவ்விஷயத்தில் திருப்திசெய்து வைக்கிறேன். ஆனால் அந்தப் பயல்கள் செய்த போக்கிலித்தனத்திற்குப் பழிவாங்காமல் விடுவேனா" என்று வெகு கோபத்தோடு போனார். "நானும் இந்தப் போக்கிலித்தனத்தைமுழுதும் கண்டறிகிறே" னென்று பப்திஸ்தாவும் கோபத்தோடே போனார்.

"விசனப்படாதே பியான்கா, உன் தகப்பனார் கோபித்துக்கொள்ளமாட்டார்" என்று தேறுதல்

சொல்லி லூசென்ஷியோ பியான்காவை அழைத்துச் சென்றான்.

பியான்கா தன்னையல்லாமல் வேறு யாரைக்கலியாணம் பண்ணிக்கொள்ளுவாள் பார்ப்போமென்று வாசற்படியிலே காத்துக்கொண்டிருந்த (Gremio) கிரேமியோ, பியான்கா லூசென்ஷியோவை மணந்தாளென்று கேள்விப்பட்டதும் சீ புளிக்குமென்று இகழ்ந்து சென்றான். இக்கூத்தை எட்டி நின்று பார்த்துக்கொண்டிருந்த கத்தரினாள் பெட்ருஷியோவை நோக்கி: "கணவா, இது எப்படி முடியுமென்று நாமும் போய் பார்ப்போம்" என்றனள்.

பெட்ருஷியோ "என் கத்தி, முதலில் எனக்கொரு முத்தங்கொடு, பிறகு நாம் போய் பார்ப்போம்" என்றனன்.

கத்தரினாள்:—என்ன நடுத்தெருவிலா ?

பெட்ருஷியோ:—என்ன? என்னைக் கணவனாகக் கொள்ள வெட்கப்படுகிறாயோ ?

கத்தரினாள்:—ஒருக்காலுமில்லை ; நடுத்தெருவில் முத்தம்கொடுப்பது வெட்கமாயிருக்கிறதொழிய உம்மைக் கணவனாக யேற்றுக்கொள்ளத் தயங்கும் எண்ணத்தைக் கடவுள் தவிர்ப்பாராக.

பெட்ருஷியோ "எனக்கு நீ முத்தம் கொடாவிட்டால் வா, திருப்பி வீட்டுக்குப்போவோம்.

வாடா வீட்டுக்குப் போவோ" மென்று தன் வேலைக்காரனுக்கும் சொல்லித் திரும்பினான். உடனே கத்தரினாள் "இல்லை இல்லை முத்தம் கொடுக்கிறேன் நில்லும் என் அன்பே" என்று பக்ஷத்தோடு ஓர் முத்தம் கொடுத்து தன் தகப்பனார் வீட்டிற்குத் தன் புருஷனை அழைத்துச் சென்றாள்.

## IX

மறுநாள் எல்லோரும் லூசென்ஷியோவின் வீட்டில் கூடினார்கள். தன் மாமனாராகிய பப்திஸ்தா, சகலன் பெட்ருஷியோ, மைத்துனி கத்தரினாள், பியான்காவை காதலித்துப் பிறகு ஓர் இளம் விதவையை மணந்த ஓர்டென்சியோவும், அவன் மணந்த விதவையும், சீ புளிக்குமென்று போன கிரெமியோவும், வேலைக்காரர்களாகிய திராணியோ, பியோன்டெல்லோ, குருமியோ, இன்னுமற்ற சினேகிதர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் குறைகளை மறந்து ஏகோபித்து புதிதாய்மணந்த தம்பதிகளாகிய பியான்கா, லூசென்ஷியோ என்பவர்களுக்கு ஆசிகூற வந்திருந்தார்கள். லூசென்ஷியோ இவர்களை அருமையுடன் உபசரித்துச் சொன்னதாவது: "ஒருவருக்கொருவர் போட்டி போட்டு வெகுவாய்ச் சண்டையிட்டபோதிலும் இப்போது நம் எல்லோருடையமனமும் ஒத்திருக்கிறது. சண்டை முடிந்தபிறகு நாம் தப்பித்துக்கொண்ட ஆபத்து சங்கடங்களைச் சந்தோஷத்தோடு நினைவுகூர்ந்து களிக்கும் காலமிதுதான். சௌந்தர்ய பியான்கா, நீ என் தகப்பனாரின் ஆசீர்வாதத்தைப் பெற்று பட்சத்துடன் அவரை உபசரி; நானும் அப்

பட்சத்துடன் என் மாமனாராகிய உன் தகப்பனுக்கு நல்வரவு கூறுகிறேன். பெட்ருஷியோ என் சகோதரா, கத்தரினாளாகிய என்சகோதரி ஓர்டென்சியோ உன் காதலியாகிய இளம் விதவையுடன் உங்களையும் என் விருந்திற்கு உபசரிக்கிறேன். வயிறு வெடித்துப்போகும்படியாய் நாம் சிரித்து, நாம் ஆடிய நடனத்தை என் விருந்து பூரணமாக்கும். வாருங்கள், வந்து பந்தியிலமருங்கள். வேடிக்கையாய்ப் பேசுவோம்,பேசிக்கொண்டேசாப்பிடுவோம்" என்று உபசரிக்க எல்லோரும் பந்தி அமர்ந்தார்கள். சாப்பிடும்போது, பப்திஸ்தா "பெட்ருஷியோ என் மகனே பதுவை நகரம் எப்போதும் எல்லோருக்கும் ஆனந்தத்தையே தரும்" என்றார்.

பெட்ருஷியோ "பதுவை ஆனந்தத்தைத்தவிர, வேறெதைக்கொடுக்கும்" ? என்று தன் மாமனார் கூறியதை ஸ்திரப்படக் கூறினான்.

ஓர்டென்சியோ பெட்ருஷியோவைப்பார்த்து:- "நம்மிருவர் விஷயத்திலும் அவ்வார்த்தை உண்மையானால் நல்லதுதா" னென்றான்.

அதற்கு பெட்ருஷியோ "ஒகோ! ஓர்டென்ஷியோ தான் கலியாணஞ் செய்துகொண்ட விதவையைப்பற்றி பயப்படுகிறாப்போலிருக்கிற" தென்றான்.

(வேறு நாமகரணம் நமக்குத் தோன்றாததால் ஓர்டென்சியோவின் மனைவியை விதவையென்றே கூறுகிறேன். மன்னிக்கவும்.)

அதற்கு விதவை கோபங்கொண்டு கத்தரினாளைப் பார்த்து: "உன் புருஷன் ஒரு சண்டைக்காரியைக் கட்டிக்கொண்டு அவஸ்தைப்படுவதால் அத்துக்கத்தால் என் புருஷன் துக்கத்தை அளக்கிறார் நான் சொல்லுவதின் கருத்து உனக்கு விளங்குகிறதென்று நினைக்கிறேன்" என்று கத்தரினாளின் பஜாரித்தனத்தை சுட்டிக்காட்டினாள்.

பிறகு போஜன முடிவில் புருஷர்களை அவ்விடமே சுருட்டு பிடிக்கவிட்டு ஸ்திரீகளெல்லோரும் எழுந்திருந்து கூடத்திற்கு வந்துசேர்ந்தார்கள்.

விதவை கூறிய வார்த்தைகளை உன்னி, பப்திஸ்தா தன் மருமகன் பெட்ருஷியோவைப் பார்த்து "என் மகனே பெட்ருஷியோ, உனக்குத்தான் ஓர் பஜாரி மனைவியாகக் கிடைத்ததைப்பற்றி நான் மிக்க விசனிக்கிறேன்" என்று துக்கத்தோடு கூறலானார்.

அதற்குப் பெட்ருஷியோ "ஒருக்காலுமில்லை. கீழ்ப்படிதலில் என் மனைவிக்குச் சமானம் கிடையாது அதற்கு அத்தாட்சி வேண்டுமானாலும் காட்டுகிறேன். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனைவியைக் கூப்பிட்டனுப்புவோம்; யாருடைய மனைவி கூப்பிட்டவுடன் முதலில் கீழ்ப்படிந்து வருகிறாளோ அவனே நாம் கூறும் பந்தயத்தைக் கெலித்தவனாவான் என்றான்.

ஓர்டென்சியோ:—சரி, பந்தயமென்ன ?

லூசென்ஷியோ:—20 ரூபாய்.

பெட்ருஷியோ:—20 ரூபாயா! என் ராஜாளிக்கு அல்லது என் நாய்க்கு அவ்வளவு பந்தயம் கட்டுவேன். ஆனால் என் மனைவிக்கு 20 விசை 20 ரூபாய் கட்டுகிறேன் என்றான்.

லூசென்ஷியோ:—அப்படியானால் 100 ரூபாய் பந்தயம் கட்டுவோம்.

ஓர்டென்சியோ:—சரி.

பெட்ருஷியோ:—இதோ கட்டிவிட்டேன்.

ஓர்டென்சியோ:—யார் துவக்குகிறது.?

லூசென்ஷியோ:— நானே துவக்குகிறேன். அடா பியோண்டெல்லோ நீபோய் உன் எஜமானியை என்னிடம் வரும்படியாகச் சொல்.

பியோன்டெல்லோ அப்படியேயென்று சொல்லிக் கூப்பிடப்போனான்.

பப்திஸ்தா லூசென்ஷியோவைப் பார்த்து "உன் பந்தயத்தில் நான் பாதி கூட்டாளியாயிருக்கிறேன். பியான்கா அகத்தியம் வருவாள்" என்றார்.

லூசென்ஷியோ "எனக்குக் கூட்டாளி வேண்டாம் நஷ்டம்வந்தாலும் நானே சுமக்கிறேன்" என்று தன் பேச்சை முடிக்கா முன்னர் பியோன்டெல்லோ திரும்பிவர "என்ன செய்தி" யென்று வினவினான்.

பியோன்டெல்லோ "ஐயா என் எஜமானி வேலையாயிருக்கிறார்களாம், அவர்கள் வரமுடியாதாம்" என்றான்.

பெட்ருஷியோ:—என்ன? வேலையாயிருக்கிறாளாம், வரமுடியாதாம், இதுதானா பதில்?

கிறெமியோ "அதற்கென்ன, பட்சத்தோடு அதாவது பதில் சொல்லியனுப்பினாளே, உன் பெண்சாதி இதைவிட கெடுதலான பதிலுரையாமலிருக்கக் கடவுளைப் பிரார்த்திக்கிறே" னென்றான்.

பிறகு ஓர்டென்சியோ "பியோண்டெல்லோ நீ போய், என் மனைவியைத் தயவு செய்து உடனே வரும்படியாய் நான் கேட்டுக்கொண்டதாகச் சொல்" என்றான்.

பெட்ருஷியோ "ஓகோ அவளை மன்றாடவும் வேண்டுமோ? அப்படியானால் உடனே தான் வருவாள்" என்றான்.

ஓர்டென்சியோ:—"ஐயா நீர் உம்மால் கூடியதைப் பாரும். காலில் விழுந்தாலும் உம்மனைவி வரமாட்டாளென்று நான்நிச்சயமாய்ச்சொல்லுகிறேன்" என்றான். இதற்குள் பியோண்டெல்லோ திரும்பிவர "என் மனைவி எங்கே?" என்றான்.

பியோண்டெல்லோ "ஏதோ பரிகாசம் செய்யக் கூப்பிடுகிறீராம். அவர்கள் வரமாட்டார்களாம். உங்களைத் தங்களிடத்தில் வரச் சொன்னார்கள் என்றான்.

இதைக் கேட்டதும் பெட்ருஷியோ "பேஷ்! பேஷ்! அவள் வரமாட்டாளாம்! இதைவிட அவமரியாதை வேண்டுமோ? பொறுக்கக் கூடாதது! சகிக்க முடியாதது! அடா குருமியோ நீ உன் எஜமானியிடம் போய் அவளை உடனே இவ்விடம் வரும்படியாய் நான் கட்டளையிட்டதாகச் சொல்" என்று தன் வேலைக்காரனை அனுப்பினான்.

ஓர்டென்சியோ "அவளுடைய பதில்தான் எனக்கு முன்னமே தெரியுமே" என்றான்.

பெட்ருஷியோ:—என்ன?

ஓர்டென்சியோ:—ஒருக்காலும் வரமாட்டாள்.

பெட்ருஷியோ:—"அப்படியானால் என் கதி நிற்பாக்கியம்தான்" என்று சொல்லி முடிக்கிறதற்குள்ளாக கத்தரினாள் வந்தாள். அதைக்கண்ட பப்திஸ்தாவும் ஆச்சரியப்பட்டு "என்ன அதிசயம் இதோ வருகிறாள் கத்தரினாள்" என்றார். கத்தரினாளும் தன் புருஷன் எதிரே வந்து "ஐயா உம்முடைய சித்தம் யாது? என்னை வரவழைத்த காரணமென்ன?" வென்று வெகு பணிவாய்க் கேட்டாள்.

பெட்ருஷியோ "உன் சகோதரியும், ஓர்டென்சியோவின் மனைவியும் எங்கே" என்று கேட்டான். "கூடத்தில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள்" என்றாள் கத்தரினாள்.

அவர்களை "இவ்விடம் கொண்டுவா, வரமாட்டேனென்றால் அவர்களை அவர்கள் புருஷரிடம் இழுத்துக்கொண்டுவா. உடனே போ. நேராய் அவர்களை இவ்விடம் கொண்டுவா" என்று அவள் புருஷன் கூறியவுடன் கத்தரினாள் புறப்பட்டுபோனாள். "ஆச்சரியமென்றால் இதல்லவோ ஆச்சரியம் என்றான்" லுசென்ஷியோ.

ஓர்டென்சியோ:-ஆச்சர்யத்திலும் ஆச்சரியமே ஆனால் இது என்னத்திற்கோ?

பெட்ருஷியோ "என்னத்திற்கு? சமாதானம், நேசம், அமரிக்கையான ஜீவியம் இவைகளுக்குத்தான் இது அறிகுறி" என்றான்.

பப்திஸ்தா:—பெட்ருஷியோ உனக்கு மங்களமுண்டாகுக. நீயே பந்தயத்தைக் கெலித்தாய் அவர்களுடைய நஷ்டத்துடன் நானும் இருபதினாயிரம் ரூபா சேர்த்து உனக்குக் கொடுப்பேன். என் மற்றொரு மகளுக்கு, மற்றொரு ஸ்திரீதனம். அவளுக்கு முன்னில்லாத குணம் தோன்றி அவளெனக்கொரு புதிய மகளானாள்" என்று பப்திஸ்தா புகழ, பெட்ருஷியோ "ஐயா சற்றுப்பொறுங்கள். புதிதாய்க் கற்றுக்கொண்ட அப்புண்ணியத்தின் அலங்காரத்தை உங்களுக்குக் காட்டி என் பந்தயத்தை யாவரும் மெச்சத்தக்க விதமாய்க் கெலித்துக்கொள்ளுகிறேன் பாருங்கள். உங்கள் வார்த்தைக்கு இணங்காத உங்கள் மனைவிகளைத் தன்னுடைய மென்மதுர

வேண்டுகோளால் வசப்படுத்தி இதோ கொண்டு வருகிறாள்" என்றான். இதற்குள் கத்தரினாள் பியான்காவையும் விதவையையும் கைபிடித்து இழுத்துக் கொண்டுவந்தனள். அவள் கீழ்ப்படியும் விதத்தை எல்லோருக்கும் விளக்கிக்காட்ட "கத்தரினாளே, நீ அணிந்திருக்கும் தலைச்சீராய் உன் முகத்துக்கு அழகாயில்லை. அந்தத் தொப்பியை காலாலுதைத் துத்தள்ளு" என்றான். அவன் புருஷன் சொன்ன வுடனே தன் தொப்பியைக் கீழே யெறிந்து காலால் மிதித்து நின்றாள்.

இதைக் கண்ட விதவை "இவ்வளவு மூடத் தனம் எனக்கு இல்லாததற்காக நான் சந்தோஷப் படுகிறேன்" என்றாள். பியான்காவும் தன் சகோ தரி செய்ததை அங்கீகரியாமல் "சீ இது என்ன மூடத்தனமான கீழ்ப்படிதா" லென்றாள்.

லுசென்ஷியோ பியான்காவைப் பார்த்து "உன்னுடைய கீழ்ப்படிதலும் இவ்வளவு மூடத் தனமாயிருந்திருந்தால் எனக்கு எவ்வளவு திருப்தி யாயிருக்கும். அடி பியான்கா உன்னுடைய புத்தி சாலித்தனமான கீழ்ப்படிதலால் விருந்து முடிவதற் குள் 10) ரூபாய் இழந்தேன்" என்றான். அதற்கு பியான்காள் "என் கீழ்ப்படிதலுக்காக நீர் பந்தயம் வைத்தது ஓர் பெரிய மூடத்தன" மென்றாள். பெட்ருஷியோ கத்தரினாளைப் பார்த்து "கத்தரினா ளே, தங்கள் கணவரும் எஜமானனுமானவருக்கு தாங்கள் செலுத்தவேண்டிய கடமை இன்னதென்று

இப்பிடிவாதக்காரப் பெண்களுக்கு எடுத்துக்காட்டு" என்றான்.

அதற்கு விதவை:—"வா, வா, நாம் போவோம். நீர் எங்களைப் பரிகாசம் செய்யவேண்டாம் அவளும் எங்களுக்கொன்றும் புத்திகற்பிக்க வேண்டுவதில்லை" என்றாள்.

பெட்ருஷியோ "முதலில் இவளுக்குச் சொல்லத்துவக்கு" என்று சொன்னவுடன் கத்தரினாள் விதவையைப் பார்த்து: "சீ! சீ! இக்கொடுமையான கோபக்குறிகளைக் காட்டும் உன் முகத்தைச் செவ்வைப்படுத்து. உன் எஜமானனும் உன் இராசாவும் உன் ஆண்டவனுமான உன் புருஷனைப் புண்படுத்தும் இவ்வலக்ஷியப் பார்வையை விட்டொழி. மைதானப் புல்லை உறைந்த பணி கருக்குவதுபோல அவைகள் உன்னழகைக் கறைப்படுத்துகின்றன. சுழல் காற்று முளைத்தெழும் அழகிய மலர்களைச் சிதறவடிப்பது போல் உன் கீர்த்தி சிதறிப்போகின்றது. அது ஒரு போதும் உனக்கழகல்ல, சற்குணமல்ல, கோபங் கொண்ட ஸ்திரீ ஓர் கலங்கிய நீர் ஊற்றுக்குச் சமானம். சேறு நிறைந்து, அசங்கிதமாய், அழகற்றுப்போயிருக்க எவ்வளவு தாகஸ்தனானாலும் ஓர் துளியாகிலும் தன் வரண்ட நாவில் அதைத் தொட்டு வைக்க சம்மதிப்பானோ? உன் புருஷனே உனக்கு தெய்வம், உன் உயிர், உன் காவலன், உன் தலை, உன் இராஜன். நீ சவுக்கியமாயும் சுகமாயும் வீட்டில் தங்கியிருக்கத் திரைகடலோடியும் தேசாந்திரம் திரிந்

தும் தன் தேகத்தை வருந்தியும் இராக்கண் விழித்தும் பகலில் குளிரில் வருந்தியும் உன்னைச் சம்ரக்ஷிக்கக் கவலைகொண்டவன் அவனே. இப்பெரிய கடனுக்கு உன்னிடமிருந்து அவன் விரும்பும் கைம்மாறு என்ன? உன் நேசம், அழகிய உன் நோக்கம், மெய்யான கீழ்ப்படிதலாகிய இச்சிறு கூலியே. குடிகள் தங்கள் அரசனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளை, ஓர் ஸ்திரீயானவள் தன் புருஷனுக்குச் செலுத்தவேண்டியவளாயிருக்கிறாள். அவள் சொற் கேளாதவளாயும் முன்கோபியாயும் வாய்ப்பட்டியுமாய் அவனிஷ்டத்திற் கிணங்கி நடவாமற் போவாளேயாகுல் தன் நேசமிகுந்த எஜமானனுக்கு அவளே விரோதி, அவளே நன்றிகெட்ட துரோகி. சமாதானம் செய்ய காலில்விழுவதைவிட்டு சண்டை போடுவதும்; ஊழியம்செய்து, நேசித்து, கீழ்ப்படிய வேண்டுமென்றிருக்கும்போது, ஆளவும், அதிகாரம் செலுத்தவும் தேடும் பெண்களுடைய மதியீனத்தைக் காணும்போது எனக்கு அவமானமாயிருக்கிறது. நம்முடைய சரீரம் ஏன் மிருதுவாயும் பலனற்றும் மழமழப்பாயும் இப்புவனத்தில் கஷ்டவருத்தங்களை அனுபவிக்கத் தகுதியற்றவைகளாயுமிருக்கின்றன? நம்முடைய வெளித்தோற்றத்திற்கு ஒப்பாகவே நம்முடைய இருதயமும் நேசத்துக்குரியதாய் இருக்கவேணுமென்றேதான். புருஷன் சொற் கேளாத பலனற்ற புழுக்களே, என் புத்தியும் உங்களுடைய புத்தியைப்போலவும், என் இருதயமும் உங்கள் இருதயங்கள் போல கடினமுள்ளதாயும் இருந்தது. வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்ல

வும், கோபத்திற்கு கோபம் காட்டியும் வந்தேன். ஆனால் இப்போது தான் நாம் பலனற்றவர்களென்றும், நாமெறியும் அம்புகளெல்லாம் வைக்கோல் துரும்புகளென்றும் கண்டேன். ஆகையால் உங்கள் அகங்காரங்களை அடக்குங்கள். ஏனென்றால் அவைகள் பிரயோஜனமற்றவை. உங்கள் புருஷர் காலாலிட்டவேலையை கையால் செய்யக் காத்திருக்கிறீர்களென்பதற்கு அடையாளமாக உங்கள் புருஷரின் காலைக்கட்டிக்கொள்ளுங்கள். இதோ என் கரங்களை அவர் பாதத்தில் வைத்துவிட்டேன். அவருக்கது சுகத்தைக்கொடுப்பதாக என்று சொல்லிமுடிக்கவே பெட்ருஷியோ "அவள் தான் பெண் என் கத்தி, எனக்கோர் முத்தம்கொடு" என்று சொல்லி எல்லோரும் அதிசயிக்க தன் மனைவியைக்கைப்பற்றினான். ஓர்டென்சியோவும் "சண்டைக்காரியை சாதுவாக்கினவன் இவ்வுலகத்தில் நீயொருவனே" என்று புகழ்ந்தான்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

முற்றிற்று.

PRINTED AT THE ALEXANDRA PRESS, KUMBAKONAM.

# தமிழ் வாசக கதா புத்தகங்கள்.

ஆங்கில பாஷையிலிருந்து சிறுவர் சிறுமிகளுக்கு உபயோகமாகும் பொருட்டு அடியிற்கண்ட புஸ்தகங்கள் தெள்ளிய நடையில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸுசீலா ஸ்வயம்வரம் ... | 0 | 2 | 0 |
| 2. | இஸபெல்லா சரித்திரம் ... | 0 | 2 | 0 |
| 3. | செல்லத்தம்மாள் சரித்திரம் | 0 | 2 | 0 |
| 4. | மார்த்தவி-பிரியவதன பரிணயம் ... | 0 | 1 | 6 |
| 5. | அரவிந்தன்-கமலாக்ஷி ... | 0 | 2 | 0 |
| 6. | ஸமனஸன் நாடகம் ... | 0 | 3 | 0 |
| 7. | மச்சரன் என்னும் மாரிகாலக்காதை ... | 0 | 8 | 0 |
| 8. | ஈனக் ஆர்டன் முதலியன ... | 0 | 3 | 0 |
| 9. | உல்லாஸன் சரிதம் ... | 0 | 5 | 0 |
| 10. | வெரோணு நகரத்து இருகுலமக்கள் ... | 0 | 3 | 0 |
| 11. | சண்டைக்காரி சாதுவாக்கப்பட்டது ... | 0 | 4 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் தேவையுள்ளவர்கள், கும்பகோணம் "இந்து எடுகேஷனல் டிரேடிங் கம்பெனியாரிடம்" பெற்றுக்கொள்ளலாம்.